விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 தை 09 திங்கட்கிழமை (23.01.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 035

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## 'பழிவாங்க நினைக்கக் கூடாது'
## கொழும்பில் கலாம் பேச்சு



(கொழும்பு), யாரையும் பழிவாங்க நினைக்கக் கூடாது; தீமைகள் செய்தவரையும் மன்னிக்கும் மனப்பாங்கு வரவேண்டும் என்று இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு வந்துள்ள கலாம், கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கனவுத் திட்டமான இலங்கையில் அனைத்து மக்களுக்கும் 2013-ம் ஆண்டுக்குள் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் கல்வி அளிக்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## அப்துல் கலாம் இன்று யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் புகழ்பெற்ற விஞ்ஞானியுமான டாக்டர் அப்துல் கலாம் இன்று யாழ்ப்பாணம் விஜயம் செய்கிறார். யாழ்ப்பாணம் வரும் அவர் மதியம் 11.45 மணி முதல் 12.45 மணிவரையில் யாழ்.பல்கலைக் கழகத்தில் 'மனநிலையின் ஒற்றுமை' என்ற தலைப்பில் கருத்துரை வழங்குகிறார்.

பின்னர், பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். இந்திய துணைத் தூதுவரின் ஏற்பாட்டில் ரில்கோ ஹோட்டலில் நடைபெறவுள்ள விருந்துபசாரத்தில் கலந்து கொள்கிறார். இந்த நிகழ்வில் சமூகப் பெரியார்களும் உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதன் பின்னர் பிற்பகல் 2.55 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு செல்லும் அவர், அங்கு பிரார்த்தனை மண்டபம் ஒன்றை திறந்து வைப்பதுடன் மாணவர்கள், ஆசிரியர்களுடன் (19ஆம் பக்கம் பார்க்க)

## மு.காவுடன் கலாம் சந்திப்பு; கூட்டமைப்புடன் இன்று பேச்சு

அபிவிருத்தி அரசியலையே இலங்கையில் மேற்கொள்ளவேண்டும் என உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்தார். இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமிற்கும் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தூதுக் குழுவுடனான பேச்சுவார்த்தை நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இச்சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுடன் உரையாடும்போதே அப்துல் கலாம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழுவிற்கும் இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமிற்கும்இடையிலான சந்திப்பு தொடர்பில் நீதி அமைச்சர் ரவூர் ஹக்கீம் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி செயற்பாடுகளில் கிராமங்களும் ஒன்றிணைக்கப்பட்ட (19ஆம் பக்கம் பார்க்க)

## ஒபாமாவின் விசேட தூதுவர் இலங்கைக்கு வருகிறார்!
### ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் ஆராய்வார்



(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் போர்க் குற்ற விவகாரங்களுக்கான விசேட தூதுவர் ஸ்ரீபன் ரப் உயர்மட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வரவுள்ளதாக வாஷிங்டன் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

ஜெனிவாவில் எதிர்வரும் பெப்ரவரி மாதத்தின் இறுதிப் பகுதியில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத் தொடருக்கான ஒரு முன்னோடியாகவே இவரது விஜயம் இடம்பெறவிருப்பதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட (19ஆம் பக்கம் பார்க்க)

## உறுப்பு நாடுகளின் உள்விவகாரத்தில் ஐ.நா. தலையீடு செய்ய முடியாது!
### -பாலித ஹோகன



ஐக்கிய நாடுகளின் பிரகடனங்களுக்கு அமைவாக உறுப்பு நாடுகளின் உள்விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் அமைப்பு தலையீடு செய்யக்கூடாது என அந்த அமைப்பிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி பாலித ஹோகன தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகளின் பிரகடனங்களுக்கு அமைவாக சர்வதேச சட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக உறுப்பு நாடுகளுக்கு கௌரவமளிக்க வேண்டும். பலவீனமான, சிறிய நாடுகள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக்கூடாது. சர்வதேச சமாதானத்திற்கு குந்தகம் ஏற்படாத சந்தர்ப்பங்களில் உள்நாட்டு விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் அமைப்பு தலையீடு செய்வதுபொருத்தமுடையதல்ல என அவர் குறிப்பிட்டுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரின் பிரச்சினைக்கு தீர்வினைக் கோரும் ஜே.வி.பி

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும் என ஜே.வி.பி. கோரியுள்ளது. நிர்வாக நடவடிக்கைகளை தமது மொழியில் மேற்கொள்வதற்கு தமிழ் மக்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டியது மிகவும் அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மும்மொழி தேசமாக இலங்கையை மாற்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உறுதிமொழி வரவேற்கப்பட வேண்டியது.

மொழிப் பிரச்சினை மட்டுமன்றி தமிழ் மக்களின் ஏனைய சகல பிரச்சினைகளுக்கும் காத்திரமான தீர்வுகளை வழங்க துரித கதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காணாமல்போனவர்களின் உறவினர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும்.

சரியான முறையில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மீள்குடியேற்றம் என்ற பெயரில் மக்களை இடம் நகர்த்துவது உசிதமாகாது.

மக்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதேவேளை, 13ஆவது திருத்த சட்டமூலம் முழுமையாக (19ஆம் பக்கம் பார்க்க)

## கச்சதீவில் மீண்டும் கொடியேற்ற முயற்சி

இந்து மக்கள் கட்சி (தமிழ்நாடு) சார்பில், கச்சதீவில் ஜனவரி 26ஆம் திகதி தேசியக் கொடி ஏற்றப்படும் என்று அந்தக் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் தெரிவித்துள்ளார்.

இந்து மக்கள் கட்சி சார்பில், சுவாமி விவேகானந்தர் பிறந்த நாளான ஜனவரி 12ஆம் திகதி முதல் இந்து சமய ஆன்மிக பிரசார யாத்திரை நடைபெற்று வருகிறது.

இதன்படி 3 நாட்கள் பயணமாக இந்தப் பிரசார யாத்திரை வெள்ளிக்கிழமை குளித்தலை பகுதிக்கு வந்தது. சனிக்கிழமை நெரூரில் வழிபாட்டுடன் யாத்திரை தொடங்கியது.

கரூருக்கு (19ஆம் பக்கம் பார்க்க)

## கிருஸ்ணா-கூட்டமைப்பு சந்திப்பை தடுக்க அலரி மாளிகையில் மாட்டுப் பொங்கல்!
### கொழும்பு ஊடகங்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களை முதலில் சந்திப்பதைத் தடுக்கவே முதலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அலரிமாளிகைப் பொங்கல் விழா நிகழ்ச்சி நிரலுக்குள் அவரைச் சிக்க வைத்ததாக கொழும்பு ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 16-ம் திகதி கொழும்பு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசவே திட்டமிட்டிருந்தார்.

ஆனால் அவர் அலரிமாளிகையில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பங்கேற்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டதால், அதன் பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளைச் சந்திக்க முடிந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முதலில் சந்திப்பதைத் தடுக்கவே அலரிமாளிகைப் பொங்கல் விழா ஏற்பாடு செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்காகவே, தைப்பொங்கலை இம்முறை அலரி மாளிகையில் ஒரு நாள் பிந்தி 16-ம் திகதி கொண்டாடுவதற்கு தெரிவு செய்திருந்தார் ஜனாதிபதி. தைப்பொங்கல் கடந்த 15ஆம் திகதி கொண்டாடப்பட்ட போதும், மறுநாள்தான் அலரிமாளிகையில் கொண்டாடப்பட்டது.

உலகெங்கும் உள்ள தமிழர்கள் அன்றைய நாளை மாட்டுப் பொங்கலாகவே கொண்டாடுவர். அதுவும் மாலையிலேயே மாடுகளுக்கு பொங்கலிட்டு வழிபடுவது வழக்கம்.

இந்திய (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் தீர்வு

# ஜனாதிபதியின் பின்னணி குறித்துச் சந்தேகம்

## ஆய்வாளர்கள் விளக்கம்

(கொழும்பு)

ஜெனிவாவில் அடுத்த மாத இறுதிப்பகுதியில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19ஆவது கூட்டத் தொடரில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள நிலையிலேயே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்றுதீர்வு வழங்கவும் தயாராக இருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணாவிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்தாக தெரியவருகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் கனடா போன்ற நாடுகள் அரசாங்கத்துக்கு எதிரான நிலைப்பாட்டில் இருப்பது அந்நாடுகளால்சுதந்தவாரத்தில்வெளியிடப்பட்ட அறிக்கைகள் புலப்படுத்தியிருந்தன.

இந் நிலையில், சீனாவை மட்டும் நம்பியிருந்து போர்க்குற்ற விவகாரத்தில் இருந்து மீளமுடியாது என்பதை அறிந்து கொண்ட அரசாங்கத்துக்கு இந்தியாவை திருப்திப்படுத்த வேண்டிய தேவையிருப்பதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆசியப் பிராந்தியத்தில் சீனா வகுக்கும் வியூகத்துக்கு எதிரான நிலைப்பாட்டை அமெரிக்கா உட்பட்ட மேற்கத்தைய நாடுகள் கொண்டுள்ள நிலையில், போர்க்குற்ற விவகாரத்தில் இருந்து மீள்வதற்கு அரசாங்கத்துக்கு இருக்கக் கூடிய ஒரேயொரு நம்பிக்கை இந்தியாதான்.

இதனைவைத்துக் கொண்டே இந்தியாவும் தன்னுடைய நகர்வுகளை மேற்கொண்டு வருவதாக கூறப்படுகின்றது.

தனது நலங்களை முதன்மைப் படுத்தி செயல்படும் இந்தியா, இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை முன்வைக்கச் செய்வதற்காக எவ்வித காத்திரமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்காமல் இலங்கையில் தனது நலன்களை பேணிக்கொள்வதற்கான நகர்வுகளை மேற்கொள்கிறது.

இந் நிலையில் இந்தியாவின் நலன்களை கவனித்தால் ஈழத்தமிழர்களைப் பற்றி இந்தியா கவலைப்படாது என்பதை நன்கு தெரிந்து வைத்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஸ்ணா சொன்ன அனைத்துக்கும் உடன்பட்டதுடன் 13ஆவது திருத்தச் சட்டத்திற்குஅப்பால்சென்றுதீர்வுவழங்கவும் தயாராக இருப்பதாகவும் இதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கு கொள்ள வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் சென்று தீர்வுவழங்கவும் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் கூறியிருந்தாலும் அது நாடாளுமன்ற தெரிவிக்குழுவின் முன் சமர்ப்பிக்கப்படும் போது சிங்கள, பௌத்த பேரினவாத கட்சிகள் அதனை நிராகரித்து விடும்.

அதேவேளை இலங்கையின் இனப்பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் சென்று தீர்வுவழங்க தயாராக இருப்பதாக அரசாங்கத்தின் தரப்பில் இருந்து இதுவரை வெளிவரவில்லை. மாறாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஸ்ணாவே கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்து குறிப்பிட்டிருந்தார்.

இது குறித்து சிரேஷ்ட அமைச்சர் சிலர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேசியபோது அந்த அர்த்தத்தில் நான் அதை சொல்லவில்லை யென ஜனாதிபதிகூறியதாகதெரியவருகிறது.

இந் நிலையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஸ்ணா சொன்னதை அரசாங்கம் உறுதிப்படுத்தப் போவதில்லை என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. அதே வேளை இந்தியாவின் தேவையிருப்பதால் அதனை மறுக்கவும்அரசாங்கம்முன்வரப்போதில்லை என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)


**A/L DAY CLASS**

**பௌதிகவியல் – N. பாபு**

(திங்கள், புதன், வெள்ளி - 7 am)

- அலகு ரீதியிலான மீட்டல்.
- MCQ தொடர்பான பரீட்சைகள்.
- புதிய அனுமதிகள் வழங்கப் படுகின்றன.

(7349)

**DMI-** ஸ்ரான்லி வீதி, (ஆரியகுளம் அருகில்) யாழ்ப்பாணம்.



**வர்த்தகப் பெருமக்களே**

**வியாபாரத்தை பதிவு செய்தல்**

**BUSINESS REGISTRATION**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

**VTL Management Services (Pvt) Ltd**

No. 01, Deanston House,
Deanston Place, Colombo 03.
T.P. 072-9994777/011-7902938/ 011-4343339


## பல லட்சம் பெறுமதியான நகைகள் உடுவில் பகுதியில் வீடுபுகுந்து கொள்ளை

(யாழ்ப்பாணம்)

உடுவில் சபாபதிப்பிள்ளை வீதியில் உள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் நுழைந்த கொள்ளையர் கும்பல் ஒன்று அங்கிருந்து சுமார் 25 இலட்சம் பெறுமதியான நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

அத்துடன் நவீன ரக தொலைக்காட்சி ஒன்றையும் எடுத்துச் சென்றுள்ளது. வர்த்தகரான நாகேந்திரன் என்பவரின் வீட்டிலேயே இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதிகாலை வேளை வீட்டினுள் நுழைந்த கொள்ளையார்கள் அங்கு நீண்ட நேரமாக சல்லடை போட்டு தேடுதல் நடத்தியதுடன் அங்கு நின்ற வளர்ப்பு நாய் ஒன்றையும் வெட்டிக் கொலை செய்துள்ளனர்.

இதனையடுத்து அப்பகுதியில் பதற்றம் நிலவியது. சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## விவசாய பீட அபிவிருத்திக்கான நிதியை அரசு நிறுத்தியது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாயப் பீடத்தை அபிவிருத்தி செய்வதற்கும் கூடுதலான பயிற்சி வசதிகளை ஏற்படுத்துவ்தற்கும் இந்தியா வழங்க முன்வந்த 2 மில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் 227 மில்லியன் ரூபாய்) திட்டத்தை அரசாங்கம் நிறுத்திவைத்துள்ளதாக திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் மாப்பா பத்திரன தெரிவித்துள்ளார்.

இதேவேளை எந்தவொரு வெளிநாட்டுத் தூதரகங்களுடனும் நேரடி கொடுக்கல் வாங்கல்களை வைத்துக்கொள்ளக் கூடாது என திறைசேரி தமக்கு அறிவித்துள்ளதாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வி.அரசரட்ணம் தெரிவித்தார்.

எனினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின் பேரிலேயே யாழ்.பல்கலைக்கழகம் இவ்வுதவியை பெறுவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்ததாக இவர் கூறினார்.

இதேவேளை, இலங்கைக்கான கல்விசார் உதவிகளை இந்தியா அதிகரித்துள்ளதாக இந்திய வெளிவிகாரஅமைச்சர்எஸ்.எம்.கிருஷ்ணா தனதுஇலங்கைவிஜயத்தின்போதுதெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## எரிகாயத்துக்குள்ளான யுவதி மரணம்

(யாழ்ப்பாணம்)

எரிகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட யுவதி ஒருவர் சிகிச்சை பலன் இன்றி நேற்று அதிகாலை மரணமானார்.

சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலியை சேர்ந்த நல்லதம்பி கௌசிகா (வயது 16) என்ற யுவதியே மரணமானவராவார்.

எரிகாயங்களுக்குள்ளான அவர் நேற்றுமுன்தினம் இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந் நிலையில் சிகிச்சை பலன் இன்றி நேற்று அதிகாலை 3.00 மணியளவில் உயிரிழந்தார். (எ-11)


'பிரயோக ஆங்கிலம்' : ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்

**YAALH ENGLISH ACADEMY : 077 3212711**

வகுப்பிட அனுசரணை : புதிய உயர்கல்லூரி : யாழ்நகர் (7339)



HSBC

Galle Literary Festival 2012 Sri Lanka

# Galle Literary Festival

Magic

Which brings in world famous authors for a literary fiesta in Galle takes a fresh direction in the extension of its programme to Jaffna.

It conducts a **Teacher Training Workshop** by the popular authors **Jeeva Raghunath** (India) on Story Telling Performance and **Robert Crowther** (UK) on Pop-up workshop for the selected teachers by the Provincial Ministry with the support of Magic, Cargills.

**Venue :** **Jaffna College Institute of Technology**

**Date :** **23rd January and 24th January, 2012**

**Time :** **from 1.30 pm - 5.00 pm**

It also conducts a **children's programme** at **Jaffna College** on **24th January** from **8.30 am - 12.30 pm.**

GLF - "The most companionable of all festivals"

Miss Riophilla Alfred
The Coordinator, GLF - Jaffna Programme.
(0778575216)

(7347)



# கண்ணீர் அஞ்சலி

சமூகசேவையாளன்

## அமரர் முத்துக்குமாரு தம்பிஐயா J.P

தோற்றம் 31 . 03 . 1930



மறைவு 21 . 01 . 2012

முன்னைநாள் திருவடிநிலை சைவத்தமிழ் கலவன் பாடசாலை அதிபரும், ஸ்ரீ ஹரி ஹர புத்திர ஐயனார் பரிபாலனசபை முன்னை நாள் தலைவரும், தற்போதைய காப்பாளரும், கலைமகள் சனசமூக நிலைய ஸ்தாபகருள் ஒருவருமாகிய முத்துக்குமாரு தம்பிஐயா அவர்களின் மறைவு எமது கிராமத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்

அன்னாரின் பிரிவால் துயருறும்

குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

ஸ்ரீ ஹரி ஹர புத்திர ஐயனார் பரிபாலன சபை,
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

(7346)



# கண்ணீர்க் காணிக்கை

## பொன்னப்பா தம்பிராசா



எமது பாடசாலையின் அதிபர் **திரு. த. அம்பலவாணர்**
அவர்களின் பாசமிகு தந்தையார்

**பொன்னப்பா தம்பிராசா**

அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து மனம் வருந்துகின்றோம்.
அன்னாரின் ஆன்மா இறைவனடி சேர இறைவனைப் பிரார்த்திப்பதோடு பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்.

(சி-5645)

# இன்று ஒரு தகவல்

## புத்தாண்டும் போலித்தனங்களும்

இன்று காலையிலே ஒருவர் எதிரிலே வந்து ஒருவரைப் பார்த்து **Happy New Year** என்றார்.

உடனே அவரும் **Same to you** என்று தனது வாழ்த்தையும் தெரிவித்தார்.

இன்றைய உலகில் யாரைப் பார்த்தாலும் "மகிழ்ச்சி பொங்கும் புத்தாண்டு வாழ்த்து" என்று சொல்வது நமது பழக்கம்.

இதைப்பற்றி சாய்பாபா என்ன சொல்கிறார் தெரியுமா?

இப்படியாக வாழ்த்துத் தெரிவிப்பதிலேயே அர்த்தம் இல்லை என்று கூறுகிறார்.

இன்று ஒருநாள் மட்டும் "மகிழ்ச்சி தரும் புத்தாண்டு" என்று சொல்லி வாழ்த்துத் தெரிவித்தால் வருடம் பூராகவும் நமக்கு மகிழ்ச்சி வந்துவிடுமா?

மனிதர்கள் தமது வாழ்க்கையை வாழ்நாள் பூராகவும் இப்படியாக போலித்தனமாகவே கழித்து விடுகிறார்கள்.

ஒரு மனிதனுக்கு சென்ற வருடம் இருந்த ஆயுள் காலத்தை விட இந்த வருடம் உள்ள ஆயுள் காலம் குறைந்து விடும். அதிலும் ஒரு வருடம் குறைந்து போய்விடும். அதுமட்டுமன்றி ஒவ்வொரு மனிதனுடைய ஆயுள் காலமும் நொடிக்கு நொடி குறைந்து கொண்டு வருகிறது. அப்படி இருக்கும் போது மனிதர்கள் வருடாவருடம் வளர்ந்து கொண்டு இருப்பதாக நினைத்து கொண்டு வாழ்த்துத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

'காலம்' என்பது நிரந்தரமானது. எல்லையில்லாதது. அழிவில்லாதது. அப்படிப்பட்ட எல்லையில்லாத காலத்திற்கு மனிதனுடைய வாழ்நாள் என்பது ஒரு சிறிய அணுமாதிரி.

இதை மனிதன் வருடம், மாதம், திகதி என்று பிரித்து அதை அனுபவிக்க முயற்சி செய்கிறான். ஒரு வருடம் பிரிகிறது. அதற்கு விடை கொடுத்து இன்னொரு புதுவருடம் பிறப்பதற்கு வழி சமைத்து வரவேற்கிறான்.

மனிதன் தன்னுடைய போலியான வாழ்க்கையை வாழ்வதற்காகத்தான் வருடம், மாதம், வாரம், நாள் என வகைப் படுத்தி வைத்துள்ளான்.

காலச்சக்கரம் எப்படி உருண்டோடுகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு வருடத்திலே 31,53,600 விநாடிகள் (60x60x24x365) இந்த விநாடிகளை நாம் எப்படி பயனுள்ளதாக செலவு செய்கிறோம் என்பதை சற்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

எத்தனை விநாடிகள் பெரியவர்களை அவமதித்துள்ளோம். எத்தனை விநாடிகள் சினிமா நாடகத்திலே போனது. ஊர் சுற்றியது எத்தனை தடவைகள். உருப்படாத புத்தகங்களைப் படித்தது எவ்வளவு விநாடி. உருப்படியான காரியம் செய்தது எத்தனை விநாடிகள்? கணக்குப் போட்டுப் பாருங்கள் விடை என்ன வருகிறது?

"சரி சேர்... இந்த உபதேசம் இருக்கட்டும்.

இந்தப் புத்தாண்டிலே எப்படி வாழ வேண்டுமென்று சொல்கிறீர்கள்? அதையும் அந்தப் பெரியவரே சொல்கிறார்.

''காலத்தை கழிக்கும் வழி என்ன'' என்று கேட்டால், கடமையை கருத்துடன் செய்வதுதான் நல்ல வழி என்று அவர் சொல்கிறார். துன்பம் இல்லாமல் வாழ வேண்டுமென்று ஆசைப் படுகிறோம். அதற்கு என்ன வழி? எல்லா துன்பங்களுக்கும் அடிப்படையாக இருக்கிற ஆசைகளைக் குறைக்க வேண்டும். அதுதான் வழி!

ஒரு புகையிரத வண்டியிலே பிரயாணம் செய்கிறோம். நாம் கொண்டு செல்லும் சுமை குறைவாக இருந்தால், பிரயாணம் சுகமாக இருக்கும்.

அதுமாதிரி ஆசைகள் என்ற சுமையைக் குறைத்து விட்டால் வாழ்க்கை என்ற பிரயாணம் சுகமாக இருக்கும். அது மாதிரி ஆசைகள் அதிகமானால் அதனாலே விளையக்கூடிய துன்பங்களையும் அனுபவிக்க வேண்டியிருக்கும்.

கையிலே சிறிய பையுடன் புறப்பட்டால் கவலையில்லாமல் பிரயாணம் செய்யலாம். இதுதான் இந்தப் புதுவருடத்திலே நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்றார்.

மனம்தான் எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிளிநொச்சி மாவட்டத்தில் சமூக விழிப்புணர்வுக்கூட்டம்

(முல்லாவி)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள கல்லாற்றுக் கிராமத்தில் பிறந்த ஒருநாள் பச்சிளம் பெண்குழந்தையை கல்லுடன் கட்டி கிணற்றுக்குள் வீசி கொன்ற சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

இதனைத்தொடர்ந்து கல்லாற்றுக்கிராமத்தில் அரச அதிகாரிகள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள், கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பிரிவினர், இராணுவ அதிகாரிகள் எனப் பலதரப்பட்டவர்களும் இணைந்து விழிப்புணர்வு செயற்பாட்டில் களமிறங்கியுள்ளனர்.

இவ்விழிப்புணர்வு செயற்றிட்டம் இலங்கைச் சிறுவர் நிதியத்தின் அனுசரணையுடன் கண்டாவளை பிரதேச செயலாளர் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் பயனாக கடந்த 17 ஆம் திகதி கல்லாறில் சமூக சேவை அதிகாரி எஸ்.ஜெயானந்தராஜா தலைமையில் ஆய்வு நடைபெற்றது.

இதன்போது கலாசார சீரழிவுகள், கசிப்பு உற்பத்தி, இளவயது திருமணம், முறைதவறிய உறவுக் குழந்தைப் பிரசவம் உட்பட பல பிரச்சினைகள் இனங்காணப்பட்டன.

பல நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்று கூடிய நிகழ்வில் சீர்திருத்த கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இவற்றை தடுப்பதற்காக கிளிநொச்சி மாவட்ட பொதுமக்கள் தொடர்பு பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.எல்.அறிவ்டீன் தலைமையில் 10 பேர் கொண்ட விழிப்புக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது.

இக்கிராம மக்கள் மத்தியில் கருத்துரையாற்றிய பொலிஸ் பொறுப்பதிகாரி குற்றச் செயல்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு எதிர்காலத்தில் இக்கிராமத்தில் பல முன்னெடுப்பு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

இங்கு வாழும் மக்கள் சமூக சீர்கேடுகளில் ஈடுபடுவோர் பற்றிய தகவல்களை 077 5524746 என்ற தனது தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு எந்த நேரத்திலும் தகவல் வழங்க முடியும் என்றும் மக்களுக்கு எந்நேரமும் பொலிஸார் உதவக் காத்திருப்பதாகவும் கூறினார்.

அத்துடன் வெளிமாவட்டங்களில் இருந்து பல்வேறு நடவடிக்கைகளுக்காக வருபவர்களின் வார்த்தைகளை நம்பி ஏமாறாது யுவதிகள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

குறிப்பாக இப்பிரதேசத்தின் பொது அமைப்புக்கள் விழிப்புடன் இருந்து இராணுவம், பொலிஸ் மற்றும் கிராமசேவகர், பிரதேச செயலாளர்கள், துறை சார் அதிகாரிகள் ஆகியோருக்கு அறிவித்து எதிர்காலத்தில் நல்லதொரு சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கு உதவுமாறு கோரிக்கை விடுத்தார்.

இந்நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலக உளவள ஆற்றுகைப்படுத்தல் உத்தியோகத்தர், தர்மபுரம் ஆரம்ப வைத்திய சாலை வைத்தியர் வி.விஜிதரன், கிளிநொச்சி மாவட்ட பொதுமக்கள் தொடர்பு பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.எல்.அறிவ்டீன், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் பி.லிசோதா, மகளிர் அபிவித்தி உத்தியோகத்தர் என்.கர்சிகா, கல்லாறு பிரதேச சிவில் பாதுகாப்பு இராணுவ பொறுப்பதிகாரி லெப்டினன் எம்.ஜெயரத்னா, சிறுவர் நிதியத்தின் சிரேஷ்ட திட்ட இணைப்பாளர் ஸ்ரீ.சரவணபவன் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வை கண்டாவளை பிரதேச உளவள ஆற்றுகைப்படுத்துனர் கே.தவச்செல்வி நெறிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-3-15)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 90 |
| உருளைக்கிழங்கு | 65 | 70-100 | 60 |
| பச்சைமிளகாய் | 80 | 140 | 150 |
| தக்காளி | 75 | 90 | 70 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 30 | 30 |
| கோவா | 60 | 60 | 70 |
| கரட் | 80 | 100 | 90 |
| பூசணி | 45 | 40 | 40 |
| புடோல் | 40 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 60 | 50 | 70 |
| பெரிய வெங்காயம் | 65 | 60 | 60 |
| பாகற்காய் | 120 | 140 | 110 |
| வெண்டிக்காய் | 70 | 90 | 70 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 60 |
| பயற்றங்காய் | 170 | 140 | 160 |
| லீக்ஸ் | 70 | 80 | 90 |
| பீற்றூட் | -- | 100 | 100 |
| கறிமிளகாய் | 180 | 160 | 150 |
| முருங்கைக்காய் | 300 | 350 | -- |
| போஞ்சி | 70 | 90 | 90 |
| கத்தரிதம்புள்ள | 40-60 | 60 | 60 |
| கீரை – 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 70 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 25 | 25 |

# இராசி பலன்

*23.01.2012*

*(தை 09,திங்கட்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.35 மணிக்கு*
*அமாவாசை பிற்பகல் 1.42 மணிவரை*
*உத்தராடம் பிற்பகல் 4.11 மணிவரை*
*இராகுகாலம் 8.06-9.36 மணிவரை*
*சுபநேரம் 12.36-2.06 மணிவரை*

**மேடம்** யோகமான நாள்,யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள்,வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்,தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் வகுப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**இடபம்** அரை குறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், குடும்பத்தில் நிலவி வந்த மனஸ்தாபங்கள் குறையும், திடீர் பயணங்கள் ஏற்பட இடமுண்டு,உறவினர் சந்திப்புண்டு.

**மிதுனம்** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, ஆரோக்கியக் குறைவான நாள், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, பயணங்களில் விழிப்புணர்வு தேவை.

**கடகம்** நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம், தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**சிங்கம்** உடல் நலம் சீராகும்,பகைவர்கள் விலகுவர்,சுவாரஸ்யமான நாள், தைரியத்தோடு பணி புரிவீர்கள், சேமிப்பு அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்,போசன சுகமுண்டு.

**கன்னி** நீண்ட நாட்களாக தள்ளிப்போட்ட காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், உயரதிகாரிகளின் பாராட்டுப் பெறுவீர்கள்,இனிய சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும் வாய்ப்புண்டு.

**துலாம்** தொழில் முன்னேற்றமுண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பெற்றோரின் தேவைகளை நிறைவு செய்வீர்கள்,செல்வாக்கு அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், சுப தகவல்கள் வந்து சேரலாம், உடன் பிறப்புக்கள் தொடர்பில் ஆதாயமுண்டு, தொலைபேசி வழித்தகவல்கள் மகிழ்ச்சி தரும், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** எதிர்பாராத வகையில் தனவரவுகள் ஏற்படலாம்,செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் ஏற்படலாம், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்,சில விவாதங்கள் ஏற்படலாம்.

**மகரம்** மனக்குழப்பங்கள் அதிகரிக்கும், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அச்சுறுத்தலாக இருந்த தகவல்கள் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் உறுதுணை வழங்குவர், உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம்.

**மீனம்** வருமானம் அதிகரிக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, தடைப்பட்ட காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம்,அதிர்ஷ்டகரமான நாள்.

வளவன்





யாழ். பல்கலைக்கழகத்தின் 2011 / 2012 ஆம் ஆண்டுக்கான முதுகல்விமாணி கற்கை நெறியின் ஆரம்ப நிகழ்வு யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் உரையாற்றுவதையும் ஏனைய பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் கற்கை நெறிகளை மேற்கொள்ள வந்திருந்த ஆசிரிய மாணவர்களையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:- அலுவலகசெய்தியாளர்)*

## மின்தடை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதனால் தினமும் காலை 8.30 மணிமுதல் மாலை 5 மணிவரை குறிப்பிட்ட இடங்களில் மின் விநியோகம் தடைப்படும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை சுன்னாகம், குப்பிளான்,ம யிலங்காடு, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப் பகுதி, மல்லாகம், ஏழாலை,தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் மின் தடைப்படவுள்ளது.

நாளை மறுதினம் புதன்கிழமை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, மூடமாவடிப் பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலிநகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்திவரையான பிரதேசம்,கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சி ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்படும் என அறிவித்துள்ளார். (அ-7)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை மணிக்கூட்டு வீதி அருள்மிகு ஸ்ரீஅரசடி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

இத்திருவிழா உற்சவமானது தினமும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி 10.15 மணிக்கு வசந்தமண்டபப்பூசை இடம்பெற்று சுவாமி திருவீதியுலா இடம்பெறும். மாலை 4.45 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி 6 மணிக்கு வசந்தமண்டபப்பூசை இடம்பெற்று சுவாமி வீதியுலா இடம்பெறும் எனவும் தேர்த்திருவிழா எதிர்வரும் பெப்ரவரி 6 ஆம் திகதி நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

## வீதிக்கடவை அமைக்க பொதுமக்கள் கோரிக்கை

சங்கானை நகரப் பகுதியில் வீதிக்கடவை இல்லாமை காரணமாக பொதுமக்கள் வேகமாக வரும் ஊர்திகளுடன் மோதுண்டு விபத்துக்களை சந்திப்பதாக அப்பகுதி வர்த்தகர்களும் பொதுமக்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக தெரியவருவது, சங்கானை நகரப்பகுதிக்கு தினமும் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் வருகை தருகின்றனர்.

பொதுச்சந்தைகள், வங்கிகள், பொலிஸ் நிலையம், பிரதேச செயலகம் என பல தரப்பட்ட சேவை நிலையங்கள் நகரப்பகுதியில் காணப்படுகின்றன. இவ்விடங்களுக்கு வீதியை கடந்து செல்லும் போது யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகர் நோக்கிச் செல்லும் பல்வேறு வகைப்பட்ட ஊர்திகளினால் மோதுண்டு விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு நகர வர்த்தகர்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-15)

## சாவ. ஆதார வைத்தியசாலைக்கு ஆறு கட்டில்கள் வழங்கப்பட்டன

(சாவகச்சேரி)

பின்லாந்து செஞ்சிலுவைச் சங்கத்தினால் கொழும்பு வயோமெட் நிறுவனத்தின் ஊடாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நோயாளர் தங்கி சிகிச்சை பெறும் இரு விடுதிகளின் அதி தீவிர சிகிச்சை பிரிவிற்கு 6 கட்டில்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த சங்கத்தால் மூன்று மில்லியன் ரூபா பெறுமதியான 6 கட்டில்களும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வயோமெட் நிறுவனத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் பொருத்தப்பட்டு வருகின்றது.

பின்லாந்து செஞ்சிலுவைச் சங்கத்தினர் வைத்தியசாலை வளாகத்தில் 135 மில்லியன் ரூபா செலவில் விடுதிக்கட்டடங்களை நிர்மாணித்து அவற்றுக்குரிய உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் ஏற்கனவே கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-3-29)

## கலந்துரையாடல்

யா/தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியின் எதிர்கால அபிவிருத்தியும் வளர்ச்சியும் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கல்லூரியின் அமரர் துரையப்பாபிள்ளை ஞாபகார்த்த மண்டபத்தில் அதிபர் குணரத்தினம் வேல்சிவானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கல்லூரியில் கல்வி பயின்று இன்று பல துறைகளிலும் இருக்கின்ற பழைய மாணவர்கள் ஒன்று கூடி கல்லூரியின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாக ஆய்வு செய்யப்படவுள்ளது. எனவே அனைத்து பழைய மாணவர்களும் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் 0774244584, 0777903338 என்ற தொலைபேசி இலக்கங்களுடனோ அல்லது 0213214004 என்ற தொலைபேசிஇலக்கத்துடனோ தொடர்பு கொண்டு தமது வரவுப்பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கல்லூரியின் பழைய மாணவர் சங்க இணைச்செயலாளர்கள் சி.உமாகாந்தன், ரி.புனிததயாபரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

(அ-3-15)

## கும்பாபிஷேகம்

(நயினாதீவு)

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் திருக்கோவில் இராஜகோபுர மகா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது என நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

இக்கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 28அம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு ஆலய தெற்கு வீதியிலுள்ள ஸ்ரீபுவனேஸ்வரி கலையரங்கில் பரதநாட்டிய நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வினை கொழும்பு அபிநயச் சித்ரா இசைநடனக் கல்லூரியின் ஆசிரியை செல்வி திவ்யா சிவநேசன் மற்றும் அவரது குழுவினரது பரதநாட்டிய நிகழ்வு நடைபெறவுள்ளது. (அ-7-8)

## யாழ்.செய்திகள்

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

அல்வாய் குமுழடி அதிசய விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெற்று வருகின்றது.

இவ்விழா காலங்களில் கம்பராமாயணம் என்னும் தொனிப்பொருளில் தொடர் சொற்பொழிவினை சொல்வேந்தர் பொன். சுகந்தன் ஆற்றவுள்ளார். (அ-7)

## மஹா சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான நாராயணன் திருக்கோவில் வருடாந்த இலட்சார்ச்சனையும் மஹா சங்காபிஷேகமும் இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது என தேவஸ்தான பரிபாலன சபை அறிவித்துள்ளது.

இதன்போது பெப்ரவரி 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு மஹா சங்காபிஷேகம் இடம்பெற்று பின்னர் மாலை 6 மணிக்கு ஸ்ரீதேவி, பூதேவி சமேதராய் பூந்தண்டிகை வீதியுலாவும் நடைபெறவுள்ளது. (அ-7)

## மாணவர்களுக்கான போட்டிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கான பல்வேறு போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனையினரால் கோரப்பட்டுள்ளது.

இதில் தரம் 6,7 மாணவர்களுக்கான பூவினால் கோலம் போடல் போட்டி, தரம் 8,9 மாலை கட்டல் போட்டி, தரம் 10,11 வில்லுப்பாட்டுபோட்டி தரம்12,13 கொத் துத்தோரணம் பின்னும் போட்டி ஆகியவை நடத்தப்படவுள்ளன.

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் சைவசமயம் மற்றும் இந்து நாகரிகம், இந்து சமயம் கற்கும் மாணவர்கள் தமது பாடசாலை அதிபருடன் தொடர்பு கொண்டு நிபந்தனைகளுக்கேற்ப எதிர்வரும் 30ம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (அ-3-29)

## ஆசிரியர்களுக்கான கோலப்போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் சைவ சமய ஆசிரியர்களுக்கான கோலப்போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்கு பற்றும் ஆசிரியர்கள் உரிய நேரத்திற்கு சமூகமளிக்க வேண்டும்.

கோலம் போடுவதற்கு 30 நிமிடங்கள் ஒதுக்கப்படும். விரும்பிய உருவத்தை வரைந்து உரிய நேரத்திற்குள் கோலத்தை பூர்த்தி செய்தல் வேண்டும். கோலம் போடுவதற்கு தேங்காய்பூவை மட்டும் பயன்படுத்தலாம். அதற்கான வர்ணம், தேங்காய்ப்பூ என்பவற்றை ஆசிரியர்கள் எடுத்து வரவேண்டும் என தென்மராட்சி வலயக் கல்வி பணிமனையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)






இந்தியன் வங்கியின் யாழ்ப்பாணம் கிளையின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவும் இந்தியன் வங்கியின் முன்மாதிரி கிராம அபிவிருத்தி திட்ட ஆரம்ப விழாவும் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். இந்திய துணைத்தூதராக அதிகாரி வி. மகாலிங்கம், யாழ். அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் ஆகியோர் இணைந்து வட்டுக்கோட்டை மகளிர் சுய உதவிக்குழுவிற்கு காசோலை வழங்குவதனையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின்)

# வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் அன்ரன் பாலசிங்கத்திற்கும் விரிசல்

## விக்கிலீக்ஸ் தகவல்

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் அந்த இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கும் இடையில் பிணக்கு ஏற்பட்டு இருந்தது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்கு தகவல் தெரிவித்து இருக்கின்றார்.

கடந்த 2003 ஆம் ஆண்டு டோக்கியோவில் இடம்பெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் புலிகள் புறக்கணிக்க வேண்டும் என்பதும் பிரபாகரனின் விருப்பமாக இருக்க அம்மாநாட்டில் புலிகள் கலந்து கொள்ள வேண்டும் என்பது அன்ரனின் விருப்பமாக இருந்தது என்றும் இந்த அபிப்பிராய பேதத்தை தொடர்ந்து இருவருக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டது என்றும் குறித்த எம்.பி தெரிவித்திருந்தார்.

சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகளில் கடும் போக்கை கைக்கொள்ள பிரபாகரன் தீர்மானித்து இருந்தார் என்றும் அன்ரனின் மென்மையான போக்கு பிரபாவுக்கு ஒத்துவரவில்லை என்றும் இதனால் தமிழ்ச்செல்வனுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கி இருக்கின்றார். உடல் நிலை மோசமான நிலையில் அன்ரன் ஒதுங்கிக் கொண்டார் என்றும் செய்திகள் அந்நாட்களில் ஊடகங்களில் வெளியாகி இருந்தன. அத்துடன் தமிழ்ச் செல்வனுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டு இருந்ததாக தெரிந்து உள்ளது. இந்நிலையில் உடல் நிலை காரணமாக அன்ரன் ஒதுங்கிக்கொண்டாரா? அப்பிராயபேதம் காரணமாக பிரபாகரனால் ஒதுக்கப்பட்டு இருக்கிறாரா? என்று அமெரிக்காவுக்கு சந்தேகம் எழுந்து இருந்ததாம் என்றும் சொல்லப்படுகிறது. தமிழ் கூட்டமைப்பு எம்.பி ஒருவர் தமக்கு இத்தகவலை தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் தற்போது தெரிவித்துள்ளது. (அ-2)

# பாடசாலை போக்குவரத்து சேவையில் 30 வயதைக் கடந்தவர்களே ஈடுபடலாம்

கொழும்பு மாநகரின் பிரதான பாடசாலைகளுக்கான போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்களை செலுத்துவதற்காக 30 வயதை கடந்த சாரதிகளை மாத்திரம் பயன்படுத்துவதற்கான வாகன உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்களின் உரிமையாளர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போது இதற்கான இணக்கம் காணப்பட்டதாக கொழும்பு சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அனுரசேனநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் வாகன உரிமையாளர்கள் சுமார் ஆயிரம்பேர் கலந்து கொண்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதனைத்தவிர குறைந்த பட்சம் ஐந்து வருட அனுபவமுள்ள சாரதிகளை மாத்திரம் பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோனின் ஆலோசனைக்கு அமைய இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் சாரதிகள் ஒழுக்கமிகு ஆடைகளை அணிந்து சேவையில் ஈடுபட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை கண்காணிப்பதற்கும் பொலிஸார் தீர்மானித்துள்ளனர். (அ-2)






### கண்டெடுப்பு

சின்னப்புதுக்குளத்தைச் சேர்ந்த அம்புறூஸ் கிறிஸ்ரி என்பவரது கடவுச்சீட்டு இல N 22 110 59 கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் தகுந்த ஆதாரம்காட்டி பெற்றுக் கொள்ள முடியும்.(அ-7-84)

### ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலை திறப்பு

ஸ்ரீஜெயவர்த்தன புர பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்கள்கல்வி நடவடிக்கைக்காக இன்று திங்கட்கிழமை மீண்டும் திறக்கப்படவுள்ளது.

பெற்றோல்குண்டொன்று வீசப்பட்ட பின்னர் மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற நிலையில் இப் பகலைக்கழகம் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் மாணவர்களின் பிரதிநிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின்பின்பல்கலைக்கழகத்தை திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இப்பல்கலைக்கழகத்தில்சுமார்12ஆயிரம் மாணவர்கள் கல்விகற்கின்றனர்.

# தமிழினப் படுகொலையை தடுக்க ஐ.நா பாதுகாப்புச்சபை தவறிவிட்டது

## ம.உ.சபையின் முன்னாள் ஆணையாளர்

(கொழும்பு)

**இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட தமிழினப் படுகொலையை தடுக்க ஐ.நா பாதுகாப்புச் சபையின் பிராந்திய ரீதியிலான செயலின்மையே காரணமென ஐ.நா மனித உரிமைச் சபையின் முன்னாள் ஆணையாளரும் இன்ர நஷனல் கிறிஸ்ரிஸ் குரூப் அமைப்பின் தலைவருமாகிய லூயிஸ் ஆர்போர் அம்மையார் தெரிவித்துள்ளார்.**

பிரான்சில் இருந்து வெளிவரும் நாளேடு அம்மையாரை செவ்வி கண்டிருந்தது.

அரபுலகில் ஏற்பட்டுள்ள மக்கள் எழுச்சி அதன் பின்னாளான அனைத்துலகத்தின் செயற்பாடுகள் குறித்தான இச் செவ்வியிலேயே மேற்குறிப்பிடப்பட்ட கூற்றினை அம்மையார் தெரிவித்துள்ளார்.

ஒருமித்த கருத்தினைக் கொண்டிராத ஐ.நா பாதுகாப்புச் சபையில் லிபியாவில் ஏற்படவிருந்த பேரழிவில் இருந்து மக்களைக் காக்கும் நோக்கில் 2011 ஆம் ஆண்டு மார்ச்சில் 1973 தீர்மானம் சபையில் பிரயோகிக்கப்பட்டு அது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது ஆச்சரியமான ஒன்று.

பிராந்திய ரீதியிலான செயல்முறையை கொண்டிராத பாதுகாப்புச்சபையின் நிலை இலங்கைவிடயத்தில் நிருபணமாகியது. அது 2009 ஆண்டில் பேரழிவுக்கு வழி வகுத்தது.

உண்மையான நல்ல நோக்கங்களை கொண்ட முன்மொழிவுகள் சபையில் ஏமாற்றங்கொள்ள வைக்கிறது.

இவ்வாறு லூயிஸ் அம்மையார் லிபியா, சிரியா போன்ற நாடுகளில் மக்களை பாதுகாப்பதில் அக்கறை கொண்டுள்ள பாதுகாப்புச் சபை நாடுகள் இலங்கை விடயத்தில் தங்களின் ஒருமித்த நிலையை எடுக்கத் தவறிவிட்டதென்ற நிலைப்பாட்டை பதிவு செய்துள்ளது. (அ-2)

# மஹாகும்பாபிஷேகம்

(முழங்காவில்)

முழங்காவில் 31 ஆம் கட்டை சபரிமலை ஐயப்பன் ஆலய மஹாகும்பாபிஷேக நிகழ்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் 12 மணி வரை ஜெகநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கும்பாபிஷேக நிகழ்விற்கான பூர்வாங்க கிரியைகள் எதிர்வரும் 5 ,6 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

# மக்களிடமிருந்து ஒதுங்கி தனித்து வாழ்ந்தார் பிரபாகரன்

## அவரது பலவீனம் என்கின்றது அமெரிக்கா

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் இலங்கை ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும் பொதுவாக காணப்பட்ட பலவீனங்கள் முக்கியமான ஒன்றை அமெரிக்கா அறிந்து வைத்து இருந்தது.

பிரபாகரன் ஆனாலும் சரி ஜே.ஆர். ஆனாலும் சரி இருவரும் அவரவர் மக்களிடம் இருந்து ஒதுங்கி இருந்திருக்கின்றனர் என்று அமெரிக்கா கண்டு கொண்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து இரு வாரங்களுக்கு ஒருமுறை வெளிவந்த ஒரு ஆங்கில பத்திரிகை த சற்றடே ரிவியூ இப்பத்திரிகைக்கும் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் நல்ல உறவு இருந்து வந்துள்ளது.

இப்பத்திரிகையின் மூத்த ஆசிரியர்களில் ஒருவராக இருந்தவர் லூயிஸ் போல்.

இவர் கொழும்புக்கு வந்திருந்த நாட்களில் 1987 ஆம் ஆண்டு ஜூலை 7 ஆம் திகதி அமெரிக்க தூதரக அதிகாரிகள் இவரை சந்தித்து பேசி இருக்கின்றனர்.

ஒபரேசன் லிபரேசன் தாக்குதலால் புலிகள் இயக்கம் எதிர்கொள்ள நேர்ந்த நெருக்கடிகள் குறித்து தூதரக அதிகாரிகளுக்கு சொல்லி இருக்கின்றார் போல்.

புலித் தலைவர் பிரபாகரனுக்கும் ஜனாதிபதி ஜே.ஆருக்கும் இடையிலான பெரிய பலவீனம் என்னவென்றால் அவரவர் மக்களிடம் இருந்து ஒதுங்கி தனித்து உள்ளனர் என்று போல் குறிப்பிட்டுள்ளார்.

1987 ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் திகதி கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து அமெரிக்க வெளியுறவு அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருந்த இராஜதந்திர ஆவணம் ஒன்றில் இருந்து இத்தகவல்கள் விக்கிலீக்ஸ் மூலம் கிடைக்கப் பெற்றுள்ளன. (அ-2)

# ஜனாதிபதியால் கூறப்பட்ட 13 பிளசை எதிர்க்கின்றோம்

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனப் பிரச்சினையின் தீர்வுக்காக ஏற்றுக் கொண்டுள்ள 13 பிளஸ் திட்டத்தை தாம் எதிர்ப்பதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தச்சட்டம் இந்தியாவினால் இலங்கையில் திணிக்கப்பட்ட ஒன்றாகும். இந்த நிலையில் 13 பிளசில் அடங்கியுள்ள விடயங்கள் என்ன என்பதை தாம் இன்னும் அறிந்திருக்கவில்லை என்று ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

எனவே அதனை இலங்கையில் நடைமுறைப்படுத்த தமது கட்சி இணங்காது என்று ஹெல உறுமயவின் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை செனட் சபையை உருவாக்குவது தொடர்பாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ள போதும் அது தொடர்பிலும் தாம் ஆராய்ந்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை செனட் சபைக்கு அளிக்கும் எந்த ஒரு திட்டத்தையும் தமது கட்சி ஏற்றுக் கொள்ளாது நாடாளுமன்றத்தினால் கலைக்கப்படக்கூடிய ஒரு அமைப்பாகவே செனட் சபை இருக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# இஸ்லாம் பற்றி பிரசாரம் செய்துவரும் வெளிநாட்டவரை வெளியேற உத்தரவு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து தங்கியிருக்கும் இஸ்லாம் பற்றி பிரசாரம் செய்து வரும் 161 வெளிநாட்டவர்களை நாட்டில் இருந்து வெளியேறுமாறு குடிவரவு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

இவர்கள் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் அரபு நாடுகளில் இருந்து இலங்கைக்கு சுற்றுலா பயணிகளாக வந்துள்ளனர்.

இந்த நிலையில் இவர்கள் நாடு முழுவதும் சென்று இஸ்லாம் பற்றி போதனை செய்து வருகின்றனர். எனினும் அவர்கள் விசா சட்டங்களை மீறி செயற்படுவதாக கூறியே நாட்டில் இருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவர்களின் அலுவலகம் ஒன்று கொட்டாஞ்சேனையிலும் இயங்கி வருவதாகவும் தப்லித் ஜமாட் என்ற அமைப்பை சேர்ந்த இவர்கள் சுற்றுலாவுக்கு இலங்கைக்கு வந்துள்ள நிலையில் வேறு விடயங்களில் ஈடுபட முடியாது என்று குடிவரவு கட்டுப்பாட்டாளர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் குறித்த அமைப்பினர் எவ்வித அரசியல் நோக்கங்களையும் கொண்டவர்கள் அல்லர் என்று மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அஸ்லாமின் உண்மையை பிரசாரம் செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த அமைப்பினர் முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸியை சந்தித்து தம்மை இலங்கையில் இருந்து வெளியேறக்கூறும் உத்தரவை விலக்கிக் கொள்ளும் முயற்சியில் நேற்று ஈடுபட்டிருந்தனர். (அ-2)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை முதல்வர் த.கண்ணபிரான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலக அரசாங்க அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், சாவகச்சேரி வைத்திய அதிகாரியும் பழைய மாணவனுமாகிய வைத்தியகலாநிதி க.தயாளன், சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி கோட்டக்கல்வி அதிகாரி அ.அமிர்தலிங்கம், அக்கராயன் மாவட்ட மருத்துவமனை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சந்திக்க பஸ்நாயக்கா, இலங்கை 7ஆவது பாதுகாப்புப்படைப் பிரிவின் 2 ஆவது கட்டளை அதிகாரி மேஜர் ஏ.ஏ. பெரேரா, அக்கராயன் பொறுப்பதிகாரி பத்ம பெரும ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர் என பாடசாலைச் சமூகம் அறிவித்துள்ளது. (அ)

# மாணவன் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

இனந்தெரியாத கும்பல் ஒன்று பாடசாலை மாணவனை வழிமறித்து கூரிய ஆயுதங்களால் வெட்டி காயப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

அதில் படுகாயமடைந்த ஏழாலை மகா வித்தியாலய மாண வன் செ.அரவிந்தன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகச்சை பெற்று வருகின்றார். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு சென்றுவிட்டு சைக்கிளில் வந்து கொண்டிருந்த பிரஸ்தாப மாணவனை வழிமறித்த இனந் தெரியாத கும்பல் ஒன்று பிரஸ்தாப மாணவனை கூரிய ஆயுதங்களால் தாக்கியுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த குறித்த மாணவன் உடனடியாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த மாணவன் ஏழாலை மகா வித்தியாலயத்தில் உயர் தரம் கற்று வருகிறார் என்றும் அதற்கு கோயில் தகராறே காரணம் என்றும் உறவினர்களால் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (பா-4)

# தபால் கட்டண உயர்வு குறித்து அறிக்கை தயார்

(கொழும்பு)

தபால் கட்டண உயர்வு குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு அது தொடர்பிலான பரிந்துரைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் அறிக்கையில் தபால் சேவைகள் அமைச்சிடம் கையளிக்கப்பட்டதாக தபால்மா அதிபர் திசாநாயக்க தெரிவித்தார். இந்த விசேட குழுவில் தபால் அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவர் உள்ளிட்ட ஆறு பேர் அங்கத்துவம் வகித்தனர்.

சாதாரண கடிதம் ஒன்றுக்காக அறவிடப்படும் ஐந்து ரூபா கட்டணத்தை பத்து ரூபா வரை உயர்த்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டதை அடுத்து இக்குழு விசேடமாக செயற்பட்டது.

ஐந்து ரூபா கட்டணத்திற்கு சாதாரண கடிதமொன்றை அனுப்புவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

சிலர் வர்த்தக கடிதங்களையும் சாதாரண கடிதங்களாக இரகசியமான முறையில் தபால்மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றமையே இதற்குக் காரணம் என பிரதி தபால்மா அதிபர் ஆர்.பி.டி.காமினி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சாதாரண கடிதமொன்றை விநியோகிப்பதற்காக சுமார் 19 ரூபாவை செலவிட நேரிட்டுள்ளதாகவும் இதனால் திணைக்களம் நட்டத்தை எதிர்நோக்குவதாகவும் பிரதி தபால்மா அதிபர் மேலும் குறிப்பிடுகிறார். (அ-2)

# கூட்டமைப்புடனான பேச்சுக்கள் இடைநிறுத்தப்படவில்லை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்படவோ அல்லது வாபஸ் செய்யப்படவோ இல்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது. சகல தரப்பினருடனும் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதன் மூலம் மட்டுமே தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினை எட்ட முடியும் என அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.**

அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்திக் கொண்டுள்ளதாக ஊடகங்களில் வெளியான தகவல்களில் உண்மையில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கம் வகிக்க வேண்டுமென ஆளும் கூட்டமைப்பைச் சேர்ந்த சில கட்சிகள் கோரி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பல கட்சிகளின் கூட்டணியாக ஆட்சி நடத்தி வரும் அரசாங்கம் ஏனைய கட்சிகளின் கருத்துக்களுக்கு செவிமடுப்பதில் தவறில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இடையிலும் முரண்பாடுகள் காணப்படுவதாகவும் இந்த முரண்பாடுகளை களைவதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழுவே சிறந்த கருவியாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தெற்கு மற்றும் வடக்கு மக்களை திருப்திபடுத்தக் கூடிய வகையிலான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைப் பொறுத்தமட்டில் மிகவும் சவால்மிக்க காரியமல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகள் இடை நிறுத்தப்படவோ அல்லது வாபஸ் பெற்றுக் கொள்ளப்படவோ இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)



தேசத்துக்கு மகுடம் 2012 ஐ முன்னிட்டு அநுராதபுரத்தில் இடம்பெற்றுவரும் வேலைத் திட்டங்களைப் பார்வையிடுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை விஜயத்தினை மேற்கொண்டார். இதன்போது அமைச்சர்களான திஸ்ஸ கரலியத்த, எஸ்.எம்.சந்திரசேன, ரஞ்சித் சியம்பலாபிட்டிய உள்ளிட்ட பலர் கலந்து கொண்டுள்ளதை படத்தில் காணலாம்.

# கடலில் மூழ்கி ஜேர்மனியர் பலி

(கொழும்பு)

ஹிக்கடுவ கடலில் நீராடிக் கொண்டிருந்த வெளிநாட்டு பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை வேளையில் நீரில் மூழ்கிய குறித்த வெளிநாட்டவர் மீட்கப்பட்டு கராபிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் ஜேர்மன் நாட்டுப் பிரஜை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஹிக்கடுவை பிரதேச சுற்றுலா விடுதி ஒன்றில் இவர் தங்கியிருந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தென்சூடானில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான அவசர உதவிகள்

## ஐ.நா.சபை தெரிவிப்பு

(கொழும்பு)

தென் சூடானில் இடம்பெற்று வரும் உள்நாட்டு கலவரங்களில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேர்வரை பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் புள்ளிவிபரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 6 மாதங்களுக்கு முன் சூடானிலிருந்து பிரிந்து தெற்கு சூடான் என புதிய நாடு தோன்றியது.

இந்த நிலையில் அங்கு உள்நாட்டு கலவரங்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன.

இதன்காரணமாக சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு மனிதாபிமான உதவிகள் அவசியமாக இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

(அ-2)

# அழகு நிலையங்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்படும்

## ஒழுக்காற்று அதிகாரசபை

தேசிய ஔடத மற்றும் வாசனைப் பொருள் சட்டத்தை மீறும் வகையில் பொதுமக்களுக்கு ஔடதங் களை விநியோகித்த 248 நிலையங்களுக்கு எதி ராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த தகவலை தேசிய ஔடத மற்றும் வாசனைப் பொருள் ஒழுக்காற்று அதிகார சபை வெளியிட்டுள்ளது.

வழக்குத் தாக்கல் செய்ததன் ஊடாக பெறப்பட்ட அபராதத் தொகையாக 27 இலட்சம் ரூபா பெறப்பட்டுள்ளதாக அந்த அதிகாரசபையின் பணிப்பாளர் ஹேமந்த பெணரகம தெரிவித்துள்ளார்.

அழகு மேம்படுத்தல் நோக்கில் செல்வோர் தாம் சேவையை பெறும் நிலையம் தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்

(வவுனியா)

வவுனியா பெரியகுளம் பிரதேசத்தில் கடந்த வியாழன் அன்று பெண்ணொருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள இருவரும் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

28 வயதான பெண் ஒருவரை இவர்கள் இருவரும் கடந்த 19 ஆம் திகதி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய பின்னர் அவரைப் படுகொலை செய்திருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

(அ-2)



# மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கு சுயாதீன பன்னாட்டு பொறிமுறை அவசியம்

## அமெ.குடியரசுக்கட்சியின் சட்டசபை உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து ஒருசுயாதீனசர்வதேசவிசாரணைஅவசியமென அமெரிக்காவின் குடியரசு கட்சியின் சட்டசபை உறுப்பினர் ஹேவர்ட் பெர்மன் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளை மீறுவோர் மீது பொறுப்புக்கூற வைக்க வேண்டிய கடப்பாடு இலங்கை அரசுக்கு இருக்கின்றதெனவும் அவர் வலி யுறுத்தியுள்ளார்.

செனட்சபையின் வெளிநாட்டு விவகாரச் செயற்குழுவில் இடம்பெறும் உயர்நிலை குடியரசுக் கட்சியின் சட்டசபை உறுப்பினராக விளங்குகின்ற ஹேவர்ட் பெர்மன் இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் தனது கூற்றை வெளியிட்டுள்ளார்.

நான் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்பட்டதனை வரவேற்கும் அதேவேளை அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள அதிகாரப்பரவலாக்கம், மொழிக்கொள்கை, ஆளுமைச் சட்டம், பேச்சு சுதந்திரம் போன்றவற்றை உடனடியாக அமுல் செய்யுமாறு இலங்கை அரசை வற்புறுத்துகின்றேன்.

அதேவேளை ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் கூறப்பட்ட இலங்கை அரசுக்கும் எல்.ரி.ரி ஈ இற்கும் எதிரான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்படாததனையிட்டு கவலை கொண்டுள்ளேன்.

கடந்த முப்பது வருட கொந்தளிப்பின் போது நடந்ததாகச் சொல்லப்பட்டுள்ள போர்க் குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் விசாரிப்பதற்கு தனிப்பட்ட சுயாதீன பன்னாட்டு பொறிமுறை ஒன்றை அனுமதிக்க வேண்டுமென்று இலங்கை அரசைக் கேட்டுக்கொள்கின்றேன் என அவர் கூற்று அமைந்துள்ளது. (அ-2)

## மரத்திலிருந்து வீழ்ந்து சிறுவன் உயிரிழப்பு

(கொழும்பு)

புசல்லாவ சோகம தோட்டத்தில் நூறு அடி உயரமான மரத்தில் இருந்து வீழ்ந்து 14 வயது சிறுவன் ஒருவன் பலியாகியுள்ளான்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம் பெற்றது.

சோகம தோட்டத்தை சேர்ந்த ஜே.கிருசாந்தன் என்பவரே இவ்வாறு பலியானவர் ஆவார்.

கருப்பந்தைலயம் மரத்தில் விறகுக்கு கிளைகளை வெட்டுவதற்காக இச்சிறுவன் மரத்தில் ஏறிய போது கால் தடுக்கி கீழே வீழ்ந்துள்ள நிலையிலே பலியாகியுள்ளான். இந்த சம்பவம் தொடர்பில் விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# மாத்தறையில் கப்பம் பெற முயன்ற ஐந்து சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

மாத்தறை பிரதேச நிதி நிறுவனம் ஒன்றின் முகாமையாளரை அச்சுறுத்தி கப்பம் பெற முயன்ற வெலிக்கடை சிறைச்சாலையின் இரண்டு அதிகாரிகள் உள்ளிட்ட ஐந்து சந்தேகநபர்கள கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் குறித்த நிதி நிறுவன முகாமையாளரை தொலைபேசி மூலம் அச்சுறுத்தி கப்பம் கோரியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதியொருவரை பயன்படுத்தி இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இந்த அச்சுறுத்தல் காரணமாக பணம் வைப்பிலிடப்பட்ட வங்கிக் கணக்கு தொடர்பிலும் பொலிஸார் பல்வேறு தகவல்களை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளனர்.

இதற்கமைய குறித்த வங்கிக் கணக்கின் உரிமையாளர் மற்றும் பணத்தை சிறைச்சாலை அதிகாரிகளிடம் கையளித்த பெண் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (அ-2)

# இலங்கையின் மனித உரிமை மீறல் குறித்து விசாரணை நடைபெறவில்லை

## ஐ.நா. சபையை சாடுகிறது இன்னர் சிற்றி பிரஸ்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. நிபுணர் குழுவால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு பல மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் அவ் அறிக்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இதுவரை விசாரணைகளை மேற்கொள்ளவில்லையென இன்னர் சிற்றி பிரஸ் விசனம் தெரிவித்துள்ளது.

இலங்கை மீது சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ளப்படுவதை தாம் பெரிதும் விரும்புவதாகவும் இன்னர் சிற்றி பிரஸ் மேலும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம் பெற்றதாக கூறப்படுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர் பாக விசாரணைகளை மேற்கொண்டு அறி க்கை சமர்ப்பிக்குமாறு பான் கீ மூன் மூவர் அடங்கிய குழுவொன்றை நியமித்திருந்தார்.

அக்குழு விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கைளை சமர்ப்பித்துள்ள போதிலும் அது தொடர்பாக ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இதுவரை விசாரணைகளை மேற்கொள்ளவில்லை. இந்த நிலையிலே இன்னர் சிற்றி பிரஸ் தனது விசனத்தை தெரிவித்துள்ளது. (அ-2)

# எஸ்கொட் நிறுவனத்தின் பங்குகளை ஜனாதிபதியின் மகன்கள் கொள்வனவு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டு மகன்மார் எஸ்கொட் ஹோல்டிங் என்ற நிறுவனத்தில் 20 வீத பங்குகளை கொள்வனவு செய்துள்ளதாக நிறுவனத்தின் இடைக்கால நிதியறிக்கையின் மூலம் இது தெரியவந்துள்ளது.

இதன்படி மஹிந்த ராஜபக்ஷவின் மகனும் கடற்படை அதிகாரியுமான யோசித்த ஒரு இலட்சம் பங்குகளை கொள்வனவு செய்துள்ளார்.

மற்றும் ஒரு மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ 92 ஆயிரம் பங்குகளை கொள்வனவு செய்துள்ளார்.

இது 2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் 30 ஆம் திகதியன்று காட்டப்பட்ட தகவலாகும். ஜனாதிபதியின் இரண்டுமகன்மாரும்பங்குகளை கொள்வனவு செய்துள்ள எஸ்கொட் நிறுவனத்தின் மொத்தசொத்துக்களின்பெறுமதி 1.25 பில்லியன் ரூபாய்களாகும். பொறுப்புகளின் தொகை 600 மில்லியன் ரூபாய்களாகும். (அ-2)

# குளிரூட்டப்படாத மருந்தகங்களை பதிவு செய்யாதிருக்க தீர்மானம்

## சுகாதார அமைச்சு தகவல்

குளிரூட்டப்படாத மருந்தகங்களை பதிவு செய்யாதிருக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

மருந்து வகைகளின் தரத்தை பாதுகாப்பதற்கு மருந்துகளை குளிரூட்ட வேண்டியது கட்டாயமாகும் என வாசனை திரவியங்கள் மற்றும் ஔடதங்கள் அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

குளிரூட்டப்படாத மருந்தகங்களுக்கு எதிராக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மருந்தகங்களை குளிரூட்டுவது தொடர்பான அறிவுறுத்தல்கள் கடந்த வருடம் விடுக்கப்பட்டிருந்ததுடன் அதனை செயற்படுத்துவதற்கு கால அவகாசமும் வழங்கப்பட்டிருந்தது.

தமது ஆலோசனைக்கு அமைய ஏற்கனவே அநேகமான தனியார் மருந்தகங்கள் குளிரூட்டப்பட்டுள்ளதாகவும் குளிரூட்டப்படாத மருந்தகங்களை சுற்றிவளைப்பதற்கான திட்டமொன்றை விரைவில் செயற்படுத்தவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-2)

# நீரிழிவு நோயாளர்கள் காசநோயால் பீடிக்கப்படுவதற்கு சாத்தியம் உண்டு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)


நீரிழிவு நோயாளர்கள் காசநோயால் பீடிக்கப்படுவதற்கான சாத்தியம் அதிகமுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்தகைய நோயாளர்களை இனங்காண்பதற்கான திட்டமொன்றை செயற்படுத்தியுள்ளதாக காசநோய் மற்றும் மார்பக புற்றுநோய் தடுப்பு தேசிய செயற்திட்டத்தின் பணிப்பாளர் டாக்டர் சுனில்.டி.அல்விஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் மூன்று நிலையங்களிலும் கண்டியில் இரண்டு நிலையங்களிலும் இதனுடன் தொடர்புடைய மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

இதற்கமைய நீரிழிவு நோயாளர்கள் காசநோய் பரிசோதனைக்கும் காசநோயால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் நீரிழிவு நோய் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நீரிழிவு மற்றும் காசநோயாளர்களுக்கிடையில் இலங்கையில் உள்ள தொடர்பினை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கம் என டாக்டர் சுனில்.டி.சில்வா அல்விஸ் தெரிவித்துள்ளார்.நீரிழிவு நோயால் பீடிக்கப்பட்டவர்கள் இலகுவாக காசநோயால் பீடிக்கப்படுவதற்கான சாத்தியம் உள்ளமை ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளதாகவும் காசநோய் மற்றும் மார்பக புற்றுநோய் தடுப்பு தேசிய செயற்திட்டத்தின் பணிப்பாளர் மேலும் கூறியுள்ளார். (அ-2)




யாழ். மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டு வரும் நீச்சல் தடாகத்தினை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் உள்ளிட்ட உயரதிகாரிகள் பார்வையிடுவதனைப் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 18

## யுத்தத்தின் தொடக்கம். சோவியத் யூனியனுக்கு எதிரான பாசிச ஆக்கிரமிப்பிற்கான ஏற்பாடுகள்



எஞ்சிய நிலப்பரப்பு முழுவதும் "ஆக்கிரமிக்கப்பட்ட போலந்து பிரதேசங்களின் ஜெனரல்-கவர்னர் மாகாணமாக" மாற்றப்பட்டது. இது 1940 ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில் "ஜேர்மன் பேரரசின் ஜெனரல்-கவர்னர் மாகாணம்" என்று அழைக்கப்படலாயிற்று.

ஹிட்லரால் "ஜெனரல்-கவர்னர் மாகாணத்தின்" தலைவனாக நியமிக்கப்பட்ட போலந்து மக்களின் கொலைப்பாதகன் ஃபிரான்க் போலந்தில் தனது நடவடிக்கையைப்பற்றி பின்வருமாறு அறிவித்தான்; "வெற்றிபெற்ற கிழக்கத்திய பிரதேசங்களை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் ஆணையும் யுத்தப்பிரதேசம் என்ற வகையிலும், யுத்தத்தில் கைப்பற்றப்பட்ட பகுதி என்ற வகையிலும் ஈவிரக்கமின்றி இப்பிரதேசத்தை அழித்து நாசப்படுத்தும் அசாதாரணக் கட்டளையும் எனக்குப் பிறப்பிக்கப்பட்டன. இந்த பொருளாதார, சமூக, கலாச்சார, அரசியல் கட்டமைப்பிலிருந்து நான் இடிபாடுகளை மலைபோல் குவிக்க வேண்டியிருந்தது." ஆனால், போலந்து மக்களைக் குலைக்க இயலவில்லை. நாட்டில் பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டம் மேன்மேலும் பரவலானது.

ஜேர்மனித்துருப்புக்கள் போலந்தினுள் நுழைந்ததும் இவை கிழக்கு நோக்கி விரைவாக முன்னேறியதும், சோவியத் யூனியனைத் தாக்குவதற்காக இதன் எல்லையருகே வசதியான நிலைகளைக் கைப்பற்ற ஹிட்லர் அரசாங்கம் முயலுகிறது என்பதை சந்தேகத்திற்கிடமின்றி காட்டியது. உருவாகிய நிலவரம் சோவியத் அரசாங்கத்தை விரைவாகவும் சுறுசுறுப்பாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு செய்தது. ஜேர்மனியத் துருப்புக்கள் கிழக்கு நோக்கி முன்னேறுவதைத் தடுப்பதும், இவை சோவியத் எல்லைக்கு வராதிருக்குமாறு செய்வதும் அவசியமாயிருந்தது. சோவியத் மக்களால் தமது சகோதரர்களாகிய மேற்கு உக்ரேனியர்கள் மற்றும் பெலோருஷ்யர்களின் நிலையைக்கண்டு-இவர்கள் பான்போலந்தில் உரிமையற்ற தேசிய இனத்தவராக இருந்து, பின்னால் முற்றிலுமாக விதியின் கரங்களுக்கு விடப்பட்டவர்களாயிருந்தனர்-பாராமுகம்காட்ட இயலவில்லை. எனவேதான் செப்ரம்பர் 17-ஆம் திகதி சோவியத் அரசாங்கத்தின் தீர்மானத்தின்படி செஞ்சேனை, மேற்கு உக்ரேன்மற்றும் மேற்கு பைலோருஷ்யாவிற்கு விடுதலைப் பயணத்தை மேற்கொண்டது. கிழக்கு நோக்கிய பாதை ஹிட்லருக்கு அடைக்கப்பட்டது. பாசிச துருப்புக்கள் நிற்க வேண்டியதாயிற்று.

1939 அக்டோபரில் மேற்கு உக்ரேனிலும் மற்றும் மேற்கு பைலோருஷ்யாவில் பொதுமக்கள் கவுன்சில்களுக்கான ஜனநாயகத் தேர்தல்கள் நடந்தன. மக்களின் சித்தத்தை நிறைவேற்றிய பொதுமக்கள் கவுன்சில்கள் மேற்கு உக்ரேனையும் மேற்கு பைலோருஷ்யாவையும் சோவியத் மக்களின் சோதரக் குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு சோவியத் யூனியனின் சுப்ரீம் சோவியத்திற்கு வேண்டுகோள் விடுத்தன. இந்த வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டது.

### பிரான்சின் மீதான தாக்குதல் (1940 மே 10 - ஜூன் 24)

நேசநாடுகளின் செயலின்மையும் அவற்றின் மூனிக், சோவியத் எதிர்ப்பு கொள்கையும் போலந்தை விரைவாக முறியடிக்க மட்டுமின்றி மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராக தாக்குதலைத் தயார்ப்படுத்தவும் ஹிட்லருக்கு உதவின. படையெடுப்பதில்லை என்ற தனது உறுதிமொழிகள் அனைத்தையும் ஹிட்லர் காலில் போட்டு மிதித்தான். 1940 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் திகதி பாசிச ஜேர்மனித் துருப்புக்கள், யுத்த அறிவிப்பின்றியே டென்மார்க் நாட்டினுள் நுழைந்தன. டென்மார்க் விரைவிலேயே ஆக்கிரமிக்கப்பட்டது. அதேநாளன்று நோர்வே நாட்டிற்கு எதிரான ஜேர்மன் ஆக்கிரமிப்பு தொடங்கியது. கடல் இறக்குப் படைகள் ஒஸ்லோ, அரென்டால், கிறிஸ்தியான்சான், ஸ்டா வன்கேர், ஏகெர்சுன், பேர்கென், டிரோன்ஹேய்ம், நார்விக், ஆகிய இடங்களிலும் ஒஸ்லோ, ஸ்டாவன் கேர்மற்ற இடங்களில் இவற்றோடுகூட வான் இறகுப்படைகளும் இறக்கப்பட்டன. தேசபக்த சக்திகளும் நோர்வே இராணுவப் படைப் பிரிவுகளும் எதிர்ப்பைக் காட்டினாலும் பாசிஷ்டுகள் நாட்டின் முக்கிய போர்த்தந்திர மையங்களைக் கைப்பற்றினர்.



நோர்வேயின் ஆக்கரமிப்பின் பின் ஜேர்மன் அலுவலர்கள், ஒஸ்லோவில் அமைந்த தேசிய அரங்கின் முன் -1940

ஏப்ரல் நடுவில் நோர்வேயில் பிரிட்டிஷ்-பிரஞ்சுத்துருப்புக்கள் தரையிறங்கின. இவை நோர்விக்கை திரும்பப்பிடித்தன. ஆனால், பாசிச ஆக்கிரமிப்பாளர்களை உறுதியோடு எதிர்த்து நிற்க முடியாததால் ஜூனில் நோர்வேயிலிருந்து இப்படைகள் வெளியேறின. நோர்வே மக்களின் துரோகியாகிய குவீஸ்லிங்கின் தலைமையிலிருந்த "ஐந்தாவது படை" என்றழைக்கப்பட்ட பாசிச ஆதரவு சக்திகளின் துணையோடு பாசிச ஜேர்மனியத் துருப்புக்கள் இரண்டு மாதத்துக்குப் பின் நாட்டை முற்றிலுமாக ஆக்கிரமித்தன.



ஜேர்மனிய காலாட்படைத் தாக்குதலால் எரியும் நோர்வேயின் கிராமம்-1940

இவ்வாறாக போலந்திற்கு எதிராக யுத்தத்தில் நடந்ததைப் போலவே ஹிட்லரின் படைத் தலைமை திடீர்த் தாக்குதல், எதிரிகளின் முகாமில் நிலவிய முரண்பாடுகள், இவர்களுடைய யுத்த சித்தாத்தங்களின் பாதுகாப்புத் தன்மை, யுத்தத்தை வழி நடத்தியவர்களின் பலவீனம் ஆகியவற்றை பயன்படுத்தி டென்மார்க், நோர்வேக்கு எதிராக வெற்றிகரமாக விரைவான தாக்குதலை நடத்த முடிந்தது. இந்நாடுகளைக் கைப்பற்றியதன் விளைவாக வடக்கே-சோவியத் யூனியனின் எல்லையருகே- முக்கியப் போர்த்தந்திரத் தாக்கு முனைகள் பாசிச ஜேர்மனிக்குக் கிடைத்தன, ஜேர்மனி தனது கடற்படைத் தளங்களை ஏற்படுத்தும் முறையை மேம்படுத்திக் கொண்டது, டென்மார்க், நோர்வேயின் பொருளாதார ஊற்றுக்களையும் ஸ்வீடனின் இரும்புத் தாதுவையும் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற்றது.



ஹிட்லர்

நோர்வே மீதான தாக்குதல் முடிவடையும் முன்னரே, பாசிச ஜேர்மனியின் படைத்தலைமை "கேல்ப்" (மஞ்சள் திட்டம்) எனும் திட்டத்தை நிறைவேற்றப்புகுந்தது. இதன்படி லக்ஸம்பர்க், பெல்ஜியம் மற்றும் நெதர்லாந்து வழியாக பிரான்சின் மீது மின்னல்வேகத்தாக்குதலைத் தொடுக்கத் திட்டமிட்டது. மேற்கு ஐரோப்பாவில் நேச நாடுகளின் படைகளை முறியடிப்பது, ஹாலந்தையும் பெல்ஜியத்தையும் கைப்பற்றுவது, பிரான்சை யுத்தத்திலிருந்து வெளியேற்றி பாசிச ஜேர்மனிக்கு ஆதாயமான சமாதானத்தில் கையெழுத்திடும்படி பிரிட்டனைக் கட்டாயப்படுத்துவது ஆகியவைதான் பிரான்சின் மீதான தாக்குதலின் நோக்கமாகும்.

"A" படைத் தொகுதியின் (தளபதி ஜெனரல் ருன்டிஷ்டேட்) 4,12,16, வது படைகள், டாங்கிப்பிரிவு, 15வது விசேட டாங்கி கோர்பஸ் ஆகியவற்றைக் கொண்டு மேற்குப்போர் முனையின் மத்தியப்பகுதியில் முக்கிய தாக்குதலைத் தொடுப்பது என்பதுதான் பிரான்சை முறியடிப்பதில் பாசிச ஜேர்மனியப் படைத்தலைமையின் திட்டமாகும். இந்தப் படைத் திரட்டில் 7 டாங்கி டிவிசன்கள் உட்பட 45 டிவிசன்கள் இருந்தன. கிட்டத்தட்ட 1000 விமானங்களை உடைய மூன்றாவது விமானப்படை விண்ணிலிருந்து இந்தப் படைத் திரட்டிற்கு ஆதரவளித்தது. படைகளுக்கு பின்வரும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. பிரெஞ்சுத் துருப்புக்கள் டாங்கிகளை எதிர்பார்க்காத லக்ஸம்பர்க், பெல்ஜிய அர்டேன்னி வழி யாகச் சென்று செடான் மற்றும் ஸ்டேனே போர் முனையில் மாஸ் ஆற்றை அடைந்து மிஜினோ எல்லைக்கோட்டோடு நேச நாட்டு முதல் படைத் தொகுதி இணையும் இடத்தருகே பிளந்து கொண்டு வெளியே வருவது.

**வி.அ.மத்சுலேன்கோ**

(தொடரும்)

# இலங்கையை ஆச்சரியம் மிக்க நாடாக மாற்றுவதே ஜனாதிபதியின் குறிக்கோள்

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையை ஆசியாவின் ஆச்சரியம் மிக்க நாடாக மாற்ற வேண்டுமென்பதிலும் ஒவ்வொரு மாவட்டங்கள் தோறும் சிறிய, நடுத்தர, பாரிய தொழிற்பேட்டைகளை நிறுவி அவற்றினூடாக சிறந்த பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை மேம்படுத்துவது தொடர்பிலும் ஜனாதிபதி அவர்கள் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் நேற்று குடும்பப் பொருளாதார மற்றும் போசனை விருத்திக்காக 25 இலட்சம் மனைப் பொருளாதார அலகுகளை அபிவிருத்தி செய்வதற்கான வாழ்வெழுச்சி தேசிய நிகழ்ச்சித் திட்டம் மன்னார் சென்சேவியர் கல்லூரியில் மாவட்ட அரச அதிபர் சரத் ரவீந்திர தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் யுத்தத்தால் குடும்பத் தலைவர்களை இழந்து பல்வேறு இழப்புக்களைச் சந்தித்து நிர்க்கதியாகியுள்ள குடும்பங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே வாழ்வெழுச்சி திட்டத்தின் நோக்கம். செழிப்பான இல்லம் வளமான தாய் நாடு என்னும் வாழ்வெழுச்சித் திட்டத்திற்காக நாடளாவிய ரீதியில் 25 இலட்சம் மக்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

மன்னார் மாவட்டம் பல்துறை சார்ந்த மாவட்டமாக விளங்கி வருவதுடன் புள்ளி விபரங்கள் அடிப்படையில் வன்னி மாவட்டத்தில் தான் மிகக் குறைந்தளவு வறுமை நிலை மக்கள் உள்ளதாகவும் எதிர்காலத்தில் இத்தொகையும் இல்லாமல் போகும் நிலை உருவாக்கப்படவேண்டும்.

சமாதானத்திற்கு சமாந்தரமாக நாட்டின் அபிவிருத்தியை ஜனாதிபதி முன்னெடுத்து வரும் நிலையில் அதற்காக பல்வேறு அபிவிருத்தி திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றார். அமைச்சரவையில் மாற்றம் என்றும் இன்னும் பல்வேறு பொய்யான கருத்துக்களையும் சில அரசியல்வாதிகள் கூறி வருகின்ற நிலையில் மக்கள் மிகுந்த அவதானமாக இருக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே இந்நாட்டில் வாழும் சகல மக்களும் இனம், மதம், மொழி என்ற வேறுபாடுகளின்றி ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழும் போது அபிவிருத்தி மேம்பாட்டை விரைவாக முன்னெடுக்க முடியும் என்றும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

மன்னார் சென்சேவியர் கல்லூரி மைதானத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 300 வரையான பல்வேறு துறைகளினதும் காட்சிக் கூடங்களும் விற்பனைக்கூடங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச். எம்.பௌசி ,அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் ரிஷாத் பதியூதீன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வன்னி பாராளுமன்ற உறுப்பினர் உணேஸ் பாரூக் மற்றும் அமைச்சுக்களினதும் அரசு திணைக்களங்களினதும் பல்வேறு துறைசார்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (பா)



# பொலிஸாரின் சடலம் மீட்பு

## கண்டியில் சம்பவம்

கண்டி ரஜபிஹில்ல மாவத்தையிலிருந்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் கண்டி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இது குறித்து பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து குறித்த பகுதியிலிருந்து சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கண்டி பொலிஸ் நிலையத்தை சேர்ந்த கான்ஸ்டபிளான அனுர வயது(40) என்பவரது சடலமே சிவில் உடையில் காணப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இச்சடலத்தின் தலைப்பகுதியில் காயங்கள் காணப்படுவதால் இதுவொரு கொலைச் சம்பவமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இது தொடர்பான விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# தமிழ்மக்களுக்கு முரணான வகையில் இந்தியா ஒருபோதும் செயற்படாது

## யாழ். அரச அதிபர் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

எம் மக்களுக்கு முரணான வகையில் இந்தியா ஒருபோதும் செயற்படாது என்ற நம்பிக்கை எங்கள் எல்லோரிடத்திலும் உண்டு. என யாழ். அரச அதிபர் திருமதி.இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இந்தியன் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் முதலாம் ஆண்டு நிறைவு விழா வும் இந்தியன் வங்கியின் முன்மாதிரிக்கிராம அபிவிருத்தித்திட்ட ஆரம்ப விழாவும் இந்தியன் வங்கியின் யாழ். கிளையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

இலங்கையில் தமிழ் மக்களாக இருந்தாலும் என்ன சிங்கள மக்களாக இருந்தாலும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தொப்புள்கொடி உறவு ஒன்று உள்ளது.

எமக்கு இந்தியா வழங்கிவரும் உதவிகள் என்றும் மறக்க முடியாததாகும்.

எமது மக்களிற்கு புகலிடம் அழித்துள்ளது. எமது அபிவிருத்தியில் பங்கெடுத்து வருகின்றது. இதைவிட மேலும் பல உதவிகளை செய்தும் வருகின்றது.

30 ஆண்டு கால கோர யுத்தத்தில் எமது மக்கள் துயரப்பட்ட போது எமக்கு இந்தியா செய்த பேருதவியினை எம்மக்கள் என்றும் மறந்து விடமாட்டார்கள், மறக்கவும் முடியாது.

கடலில் மீன்பிடிப்பதற்கு யாருக்கும் உரிமையுண்டு. இலங்கை சிறிய நாடாக காணப்படுவதனால் இங்கு றோலர் படகில் மீன்பிடிப்பதற்கு அனுமதியில்லை. ஆனால் இந்தியா மிகப் பெரிய நாடு. அங்கு றோலர் மீன்பிடிக்கு அனுமதியுண்டு. இந்நிலையில் எமது மீனவர்கள் பாதிக்கப்பட்டாத வகையில் இந்தியா திட்டங்களினை முன்னெடுக்க வேண்டும்.

இன்று எம்மக்களுக்கும் எம் பிரதேசத்திற்கும் மிக உயர்ந்த பணத்தொகைகள் இந்தியாவினால் நன்கொடையாகவும் கடனாகவும் வழங்கப்பட்டு வருகின்றது.



காங்கேசன்துறைமுகத்தில் கட்டுமானப் பணிகள் இந்தியாவின் உதவியுடன் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. யாழ்ப்பாண புகையிரதபாதை புனரமைப்பதற்கும் மேலும் 50 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கும் இந்தியா முன்வந்துள்ளது.

இந்தியன் வங்கி கிராமிய கைத்தொழில்களுக்கும் சுய தொழில்களுக்கும் கடன் வழங்கி ஊக்குவித்து வருகின்றது. இதனால் எமது மக்களின் வாழ்வாதாரம் மென்மேலும் வளர்ச்சியடையும்.

இந்தியாவில் உள்ள தொழில்நுட்பம் அணுகு முறைகளை போன்று இங்குள்ள கிராமங்களினையும் அபிவிருத்தி செய்வதற்கு இந்தியன் வங்கி முன்வர வேண்டும்.

இந்தியர்களுடையே சேவை எங்கள் வாழ்விற்கு வழிவகுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா-4)

# போர் விமானங்களை தரமுயர்த்தும் இலங்கை?

இலங்கையின் விமானப்படையை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக சீனாவிடம் வாங்கப்பட்ட மூன்று போர் விமானங்களை 6 மில்லியன் டொலர் செலவில் இலங்கை அரசாங்கம் தரமுயர்த்தவுள்ளது.

கே 8 ரகத்தைச் சேர்ந்த மூன்று போர் விமானங்களே முதற்கட்டமாக தரமுயர்த்தப்படவுள்ளன. இந்தப் போர் விமானங்களின் Head Up Display System (HUD) மற்றும் Multi-Function Display System (MFD) ஆகிய நவீன கருவிகள் பொருத்தப்படவுள்ளன.

HUD மூலம் விமானங்களின் வழக்கமான பார்வைக் கோணத்துக்கும் அப்பாலுள்ளவற்றையும் பார்க்கும் வசதி கிடைக்கும்.

MFD மூலம் போர் விமானத்திலுள்ள ரேடர் ஆயுதங்கள் மற்றும் வழிநடத்துதல் காட்சி தரவுகளை விமானி பெற்றுக்கொள்ளலாம்.

சீனாவின் தேசிய வான் தொழில் நுட்ப ஏற்றுமதி இறக்குமதி நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்டுள்ள விமானங்களைத் தரமுயர்த்தும் உடன்பாட்டுக்காக 6 மில்லியன் 40 ஆயிரத்து 300 டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியை கடந்த மாதம் அமைச்சரவை வழங்கியுள்ளது.

ஏனைய நாடுகளால் போர் நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படும் கே. 8 ரக போர் விமானங்களை இலங்கை விமானப் படை விமானிகளுக்குப் பயிற்சி வழங்கவே பயன்படுத்தி வருகின்றது.

கே. 9 ரக போர் விமானங்கள் மூன்றும் சங்காய்க்கு அனுப்பப்பட்டு தரமுயர்த்தப்படும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அமெரிக்காவில் காட்டப்பட்ட இந்தப் போர் விமானங்களில் அமெரிக்க இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# செனட் சபையில் புத்திஜீவிகள் மட்டுமே அங்கம் வகிக்க சந்தர்ப்பம் அதிகம்

## சிரேஷ்ட அமைச்சர் தெரிவிப்பு

அரசாங்கத்தின் உத்தேச செனட்சபையில் புத்திஜீவிகளுக்கு மட்டும் சந்தர்ப்பம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றக் கட்டமைப்பை அவ் வாறே பேணும் அதேவேளை புத்திஜீவிகளை உள்ளடக்கி செனட் சபை அமைக்கப்படும் என அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் சிங்கள பத் திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் செனட் சபை குறித்து நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனவும் பேச்சுவார்ததைகளின் இறுதியில் செனட் சபை அமைப்பது குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பரந்தனில் விபத்து; இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் சிறிய ரக டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி விபத்துச் சம்பவம் பரந்தனில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, பரந்தனில் இருந்து முதலாம் கட்டை பகுதிக்கு பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் முதலாம் கட்டையிலிருந்து பரந்தன் நோக்கி வந்து கொண்டிருந்த சிறிய ரக டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியுள்ளது.

இச்சம்பவத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சி.சிவநாதன் மற்றும் க. லிக்ரன் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (பா-4)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

முல்லைத்தீவுமாவட்டத்தில்டெங்கு ஒழிப்பு நடவடிக்கை கடந்த16 ஆம் திகதி தொடக்கம் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய 5 பிரதேச செயலர் பிரிவுகளிலும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அ.திலீபனின் நேரடி கண்காணிப்பின் கீழ் பிரதேச பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள் செயற்படுத்தி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு நோய் தாக்கம் இல்லாத போதும் அவை உருவாகாமல் தடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனடிப்படையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி மாசிலாமணி கலைச்செல்வன் தலைமையில் முத்தையன்கட்டு இடது கரை, முத்தையன் கட்டு வலது கரை, கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், தண்டுவான்; மாங்குளம், திருமுறிகண்டி என 7 வலயங்களாக பிரிக்கப்பட்டு பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ தாதியர், சுகாதார தொண்டர்கள், கிராம சேவகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், இராணுவம், பொலிஸார் எனப் பலதரப்பட்டவர்கள் இணைந்து பொது இடங்கள், அரச திணைக்களங்கள், பாடசாலைகள் என பொது இடங்களில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய கழிவுப் பொருட்களினை பொதுமக்களின் உதவியுடன் அழித்து வருகின்றனர். (பா-3-15)

# மனித உரிமை அமர்வுகளுக்கு முன் வடக்கில் தேர்தல் நடத்த உத்தேசம்

(கொழும்பு)

ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமை குழுவின் அமர்வுகளுக்கு முன்னதாக வடக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எதிராக சுமத்தப்படக் கூடிய போர்க் குற்றச்சாட்டுக்களை முறியடிக்கும் நோக்கில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விரைவில் வடமாகாண சபைக்கான தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் கோரப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பினால்மேற்கொள்ளப்பட்டுவரும் பிரசாரங்களை முறியடிக்கவும் இந்திய மத்திய அரசாங்கத்தின் பூரண ஆதரவினை பெற்றுக் கொள்ளவும் வடமாகாணசபைத் தேர்தல் வழியமைக்கும் என அரசாங்க தரப்பு எதிர்பார்க்கின்றது. (அ-2)

# தற்கொலை சம்பவங்களை தடுப்பதற்கு விசேட திட்டம்

## அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

தற்கொலைச் சம்பவங்களை தடுக்க விசேட செயற்றிட்டமொன்று அறிமுகம் செய்யப்படும் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையிலும் ஆசிய பிராந்திய வலய நாடுகளிலும் அண்மைக்காலமாக தற்கொலைச் சம்பவங்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தற்கொலைச் சம்ப்வங்களை தடுத்து நிறுத்தும் நோக்கில் நாடு முழுவதிலும் விசேட விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு ஆலோசனை வழங்குவதில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# 2012.01 23 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1368-சூயுவான்ஷாங் சீனாவின் பேரரசனாக முடிசூடினான். இவனது மிங் பரம்பரை 3 நூற்றாண்டுகள் சீனாவை ஆண்டது.

★ 1556-சீனாவின் சாங்சி மாநில நிலநடுக்கத்தில் 830,000 வரையானோர் உயிரிழந்தனர். உலக வரலாற்றில் மிக அதிகமானோர் கொல்லப்பட்ட நிலநடுக்கம் இதுவாகும்.

★ 1570-ஸ்கொட்லாந்தில் உள்நாட்டுப் போர் வெடித்தது.

★ 1639-பெருவைச் சேர்ந்த யூதக் கவிஞர் பிரான்சிஸ்கோ மல்டொனால்டோ டி சில்வா எரியூட்டிக் கொல்லப்பட்டார்.

★ 1719-புனித ரோம் பேரரசின் கீழ் லீக்டன்ஸ்டைன் நாடு உருவாக்கப்பட்டது.

★ 1789-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது கத்தோலிக்கக் கல்லூரியான ஜோர்ஜ்டவுன் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது.

★ 1793-ரஷ்யாவும் பிரஷ்யாவும் போலந்தைப் பிரித்தனர்.

★ 1833-போக்லாந்து தீவுகளை பிரித்தானியா மீண்டும் கைப்பற்றிக் கொண்டது.

★ 1870-மொன்டானாவில் அமெரிக்கப் படைகளினால் பெண்கள், குழந்தைகள் உட்பட 173 செவ்விந்தியர்கள் கொலை செய்யப்பட்டனர்.

★ 1874-விக்டோரியா மகாராணியின் மகன் எடின்பரோ கோமகன் அல்பிரட் ரஷ்யாவின் மூன்றாம் அலெக்சாண்டரின் ஒரே மகளான மரீயா அலெக்சாந்திரொவ்னாவை திருமணம் புரிந்தார்.

★ 1924-விளாடிமிர் லெனின், ஜனவரி 21 இல் இறந்ததாக சோவியத் ஒன்றியம் அதிகாரபூர்வமாக அறிவித்தது.

★ 1937-லியோன் ட்ரொட்ஸ்கி தலைமையில் ஜோசப் ஸ்டாலின் அரசைக் கவிழ்க்க முயன்றதாக 17 கம்யூனிஸ்டுகளின் மீது மொஸ்கோவில் விசாரணைகள் ஆரம்பமாகின.

★ 1943-இரண்டாம் உலகப் போர்: லிபியாவின் தலைநகர் டிரிபோலியை நாசிகளிடம் இருந்து பிரித்தானியர் கைப்பற்றினர்.

★ 1943-இரண்டாம் உலகப் போர்: அவுஸ்திரேலிய மற்றும் அமெரிக்கக் கூட்டுப் படைகள் பப்புவாவில் யப்பானியப் படைகளைத் தோற்கடித்தனர். இது பசுபிக்போரில் யப்பானியரின் வீழ்ச்சிக்கு வழிகோலியது.

★ 1950-இஸ்ரேலின் சட்டசபை ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அறிவித்தது.

★ 1957-சென்னை மாநிலத்தில் தமிழ் ஆட்சிமொழியாக அறிவிக்கப்பட்டது.

★ 1973-வியட்நாமில் அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சன் அறிவித்தார்.

★ 1996-ஜாவா நிரலாக்க மொழியின் முதற்பதிப்பு வெளியானது.

★ 2002-அமெரிக்க ஊடகவியலாளர் டானியல் பேர்ள் கராச்சியில் கடத்தப்பட்டார். இவர் பின்னர் கொலை செய்யப்பட்டார்.

★ 2005-திருச்சி ஸ்ரீரங்கத்தில் கல்யாண மண்டபத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் மணமகன் உட்பட 62 பேர் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1876-ஒட்டோ டியெல்ஸ், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (இ.1954)

★ 1907-ஹிடெக்கி யுக்காவா, நோபல் பரிசு பெற்ற யப்பானியர் (இ.1981)

★ 1915-ஆர்தர் லூயிஸ், நோபல் பரிசு பெற்ற பிரித்தானியர் (இ. 1991)

★ 1918-கேர்ட்ரூட் எலியன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர் (இ.1999)

★ 1929-ஜோன் போல்யானி, நோபல் பரிசு பெற்ற கனேடியர்


★ 1930-டெரெக் வால்கொட், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர்

### இறப்புக்கள்

★ 1873-இராமலிங்க அடிகள், ஆன்மீகவாதி (பி.1823)

★ 1944-எட்வர்ட் மண்ச், நோர்வே நாட்டைச் சேர்ந்த ஓவியர் (பி. 1863)

★ 1989-சல்வடோர் டாலி, ஸ்பானிய ஓவியர் (பி. 1904)



★ 1897-இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த தினம் (இ.1945)

# மற்றொரு இந்தியத் தலைவரின் விஜயமும் மற்றொரு முறை அதே வாக்குறுதிகளும்



பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்போவதாக ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ மீண்டும் ஒரு முறை கூறியிருக்கிறார். மீண்டும் ஒருமுறை என்று ஏன் நாம் கூறுகிறோம் என்றால், இதற்கு முன்னரும் அவர் இதனை பலமுறை கூறியிருக்கிறார்.

தாம் ஜனாதிபதியை சந்தித்த போது பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்போவதாக அவர் தம்மிடம் கூறியதாக இந்திய வெளியுறவுச் செயலாளர் எஸ்.எம்.கிருஸ்ணா ஓரிரு நாட்களுக்கு முன் கொழும்பில் வைத்து தெரிவித்திருந்தார். இதனை ஜனாதிபதி அலுவலகம் உறுதிப்படுத்தாவிட்டாலும் அதனை மறுக்காததால் நாமும் அதனை ஏற்கத்தான் வேண்டும்.

பதின்மூன்றாவது அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வு தேடுவதாகப் பல முறை கூறிய அரசாங்கம், அதனை எவ்வாறு செய்யப்போகிறது என்பதை ஒருபோதும் விளக்கவில்லை. அதற்குப் பதிலாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காகவென ஒன்றுக் கொன்று முரணான உத்திகளை கையாண்டு வருகிறது. ஒரு புறம் அரசாங்கம் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளது. அப்பேச்சுவார்த்தைகள் இழுபறிநிலையில் இருப்பது வேறுவிடயம்.

மறுபுறம் அரசாங்கம் இதே விடயத்திற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிக்கப் போகிறது. அதேவேளை, கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் சில சிபார்சுகளை முன்வைத்துள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகளின் போது எட்டப்படும் இணக்கங்களை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலுள்ள ஏனைய கட்சிகள் ஏற்றுக் கொள்ளும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே நிராகரித்துள்ளது. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை ஐக்கிய தேசியக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் நிராகரித்துள்ளதால் அக்குழு நியமிக்கப்படுவதும் நிச்சயமற்றதாக உள்ளது.

இந்த நிலையில்தான் ஜனாதிபதி 13 வது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் செல்வதாகக் கூறியிருக்கிறார். அதேவேளை அரசாங்கம் அவ்வாறு பலமுறை கூறியிருப்பதாலும் அக்கூற்றுக்கள் நிறைவேற்றப்படாததினாலும் எவரும் அக்கூற்றை அவ்வளவு பெரிதாக கருத்திலெடுத்ததாகத் தெரியவில்லை. அரசாங்கத்திலுள்ள தேசியவாதக் கட்சிகளும் அதனைக் கண்டும் காணாததைப் போல் இருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசபடைகளுக்கும் இடையே போர் நடந்து கொண்டிருக்கும் காலத்திலும் அரசாங்கம் 13 வது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் செல்வதைப் பற்றிக் கூறியிருக்கிறது. உண்மையிலேயே அக்காலத்தில்தான் அக்கருத்து முளையிட்டது. ஜனாதிபதி, ஹிந்தி பத்திரிகையின் ஆசிரியர் என்.ராமுடன் 2010 ஆம் ஆண்டு நடத்திய பேட்டி ஒன்றின் போதும் இதனைக் கூறியிருக்கிறார்.



அதற்கு முன்னர் 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஜனாதிபதி இந்திய தொலைக்காட்சி நிருபர் ஒருவருடன் நடத்திய பேட்டி ஒன்றின் போதும் தாம் 13வது அரசியலமைப்புத் திருத்தத்தை பூரணமாக அமுல் செய்யப் போவதாக கூறினார். ஆனால், 13வது அரசியல் அமைப்புத்திருத்தத்தை பூரணமாக அமுல் செய்வதென்பதோ அல்லது அதற்கு அப்பால் செல்வதென்பதோ என்னவென்று அரசாங்கம் ஒரு போதும் விளக்கவில்லை.

இந்த நிலையில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதைப் பற்றி பிரச்சினை வரும்போது அரச தலைவர்கள் அது முடியாத காரியம் என்கிறார்கள். 13வது அரசியலமைப்புத் திருத்தத்தை பூரணமாக அமுல் செய்வதாகவிருந்தால் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்கியே ஆகவேண்டும். ஏனெனில் அவை மாகாணங்களுக்கு பரவலாக்கப்பட்ட விடயங்களாக அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜூன் மாதம் இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமாராவ், பாதுகாப்புச் செயலாளர் பிரதீப்குமார் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்தபோது அவ்வதிகாரங்களை வழங்க முடியாது என ஜனாதிபதி அவர்களிடம் கூறினார். பின்னர் கடந்த நவம்பர் மாதம் பத்திரிகை ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் ஒன்றின் போதும் அவர் அக்கருத்தை மீண்டும் வலியுறுத்தினார்.

ஆனால், ஏதோ நடந்துவிட்டது போலும். காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதைப்பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச முடியும் என கடந்த மாதம் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா திடீரென கூறினார். மற்றொரு சந்தர்ப்பத்தில் அவர் மேலும் ஒருபடி முன்சென்று வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீளிணைப்பதைப் பற்றியும் பேசலாம் என்றார். அரசாங்கம் மாகாண மீளிணைப்பைப் பற்றிப் பேசுவதே ஆச்சரியமாக இருக்கிறது.

இப்போது ஜனாதிபதி 13வது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் செல்ல முடியும் என்கிறார். அதாவது காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்க முடியும் என அவர் கூறுகிறாரா? முன்னரும் பலமுறை இவ்வாறு கூறிவிட்டு பலமுறை காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என அரசாங்கம் கூறியிருக்கிறது. அதனாலோ என்னவோ அரசாங்கத்தில் உள்ள பேரினவாதிகள் அலட்டிக் கொள்ளாமல் இருக்கிறார்கள்.

13வது அரசியல் அமைப்புத் திருத்தத்தை பூரணமாக அமுல் செய்வதாக இருந்தால் இதற்கு இவ்வளவு கொக்கரித்துக் கொண்டு இருக்கத் தேவையில்லை. அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பலம் இருக்கிறது. எனவே 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் செல்ல முடியும். அரசாங்கத்தில் இருக்கும் தேசிய வாதிகளால் அதற்கு எதிராக ஒன்றும் செய்யமுடியாது. அப்படி ஏதும் செய்ய அவர்களுக்குதேவை இருப்பதாகவும் தெரியவில்லை. அரசாங்கம் தாம் கொடுத்த வாக்குறுதிகளை உதறித் தள்ளிவிட்டு நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீடித்த போதும் அதை சட்டபூர்வமாக்கியபோதும் அவர்கள் ஒன்றும் செய்யவில்லையே. அப்போது அவர்கள் அவற்றை எதிர்ப்பதற்கு பதிலாக அவற்றை நியாயப்படுத்தினார்கள்.

**எம்.எஸ்.எம்.அயூப்**

எனவே, பிரச்சனை அவர்கள் அல்ல. இனப்பிரச்சனைக்கு தீர்வு, அதிகாரப்பரவலாக்கலே என அரசாங்கம் இடையிடையே கூறிய போதிலும் அதனை அரசாங்கமே நம்புவதில்லைப் போலும்.

இந்திய தலைவர்கள் இலங்கைக்கு வரும்போதெல்லாம் இலங்கையின் இனப்பிரச்சனையை இரு நாட்டு தலைவர்களும் ஆராய்கிறார்கள். பிரச்சினைக்கு தீர்வு காண்பதன் அவசியத்தை இந்திய தலைவர்கள் வலியுறுத்தியதாகவும் இலங்கைத் தலைவர்கள் அதனை ஏற்றுக் கொண்டதாகவும் அப்போதெல்லாம் செய்திகள் வெளிவரும். மீண்டும் சில நாட்களில் இலங்கைத் தலைவர்கள் அது முடியாது, இது முடியாது என்பார்கள். இந்தியத் தலைவர்கள் கேட்காதவர்களைப் போல் இருப்பார்கள்.

இந்தியத் தலைவர்களின் மற்றொரு இலங்கை விஜயமொன்றின் போது, அல்லது இலங்கைத் தலைவர்களின் இந்திய விஜயமொன்றின்போது, மீண்டும் இப் பிரச்சனை ஏதோ புதிய பிரச்சினை போல் மீண்டும் ஆராயப்படும்.' இரு நாட்டு தலைவர்களும் மீண்டும் தீர்வை வலியுறுத்துவார்கள். இது 1980 களில் இருந்து நடந்து வரும் கதையாகிவிட்டது.

இந்த நிலையில் மனோகணேசன் கோருவதைப்போல், தமிழ் தலைவர்கள் தமது கொள்கைகள் எவ்வாறு இருப்பினும் வடமாகாண சபைத்தேர்தலை நடத்தும் மாறும் வலியுறுத்துவது ஒருவகையில் புத்திசாலித் தனமாகத் தெரிகிறது. ஏனெனில் அக்கோரிக்கையை தட்டிக்கழிக்க அரசாங்கத்திற்கு எவ்வித காரணமும் இல்லை. ஜாதிக ஹெல உருமயவும் அத்தேர்தலை நியாயமாக நடத்துமாறு தான் அண்மையில் கூறியிருந்தது.



மறுபுறத்தில் வடமாகாண மக்களுக்கும் பிரதேச நிர்வாகத்தின் பயன்களை அனுபவிக்க இடமளிக்க வேண்டும். போரின் பின்னாலான நிலைமையின்கீழ் வடமாகாண சபைக்கு பாரிய பங்கினை ஆற்ற முடியும். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறும் என்ற பயத்தினாலோ என்னவோ அரசாங்கம் அத்தேர்தலை நடத்த பின்வாங்குகிறது.

# சர்வதேச நாணய நிதியத்துடன் மத்திய வங்கி புதிய ஏற்பாடு

இலங்கை மத்திய வங்கி சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்பாடு ஒன்றை செய்து கொள்வது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக மத்திய வங்கியின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கி வரும் 2.6 பில்லியன் டொலர் கடன் திட்டத்தின் இறுதி இரண்டு தவணைக் கொடுப்பனவுகள் இலங்கைக்கு வழங்கப்பட வேண்டியுள்ளன.

இந்த நிலையிலேயே சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்பாடு ஒன்றை செய்துகொள்ள இலங்கை மத்திய வங்கி தயாராகி வருவதாக அவ்வதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

2.6 பில்லியன் டொலர்கள் கடன் திட்டம் முடிவடைந்ததன் பின்னரும் சர்வதேச நாணய நிதியத்துடன் கடன் திட்டங்களை பேணும் வகையிலேயே இந்த ஏற்பாடு செய்து கொள்ளப்படவுள்ளது.

ஏற்கனவே 2.6 பில்லியன் டொலர்களை இலங்கை பெற்றுக் கொள்வதற்காக மத்திய வங்கி 800 மில்லியன் டொலர்களை நம்பிக்கை மீதித் தொகையாக நாணய நிதியத்தில் நிறுத்தி வைத்திருந்தது.

இந்த நிலையில் 2.6 பில்லியன் டொலர் கடன்தொகை முடிவடையும் தறுவாயில் குறித்த 800 மில்லியன் டொலர்களை பெற்றுக் கொள்வதா? அல்லது அப்படியே விட்டுவைப்பதா? என்பது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்று மத்திய வங்கியின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை கிளை தலைவர் பிரைன் எட்கின் இன்று இலங்கை வரவுள்ளார். (2)

# வடக்கு, கிழக்கு மாகாணத்தில் 50 உப பொலிஸ் பரிசோதகர்கள்

(கொழும்பு)

பொலிஸ் வரலாற்றில் முதல் தடவையாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள 50 உப பொலிஸ் பரிசோதகர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த பயிலுநர் உப பொலிஸ் பரிசோதகர்கள் நாளை மறுதினம் களுத்துறை பொலிஸ் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றுக் கொள்வார்கள்.

தெரிவு செய்யப்பட்டவர்களில் 31 பேர் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் 19 பேர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஓராண்டு கால பயிற்சியின் பின்னர் இந்த இளைஞர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (அ-2)

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட யுவதிகள் சுய தொழில் பயிற்சிக்காக இந்தியாவுக்கு

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 800 இளம் யுவதிகளை சேவா அமைப்பின் சுய தொழில் பயிற்சிக்காக இந்தியாவுக்கு அனுப்பும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் அஹமதாபாத் மற்றும் குஜராத் ஆகிய பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி பெறுவதற்கு இந்தியா செல்வதற்கான விமானப் பயணச்சீட்டுக்களை நேற்று காலை சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார பிரதியமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் வழங்கி வைத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட யுவதிகளின் வாழ்வாதாரம் மற்றும் சுய தொழில் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் இச்செயற்றிட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 40 தமிழ், முஸ்லிம் இளம் யுவதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இச்செயற்றிட்டம் கடந்த வருடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பொன்சேகாவின் குற்றச்சாட்டுக்கு மகிந்த ஹத்துருசிங்க மறுப்பு

(கொழும்பு)

வடக்கில் இடம்பெறுகின்ற ஆட்கடத்தல்களின் பின்னால் இலங்கையின் படையினர் செயற்படுவதாக முன்னாள் இராணுத்தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தமைக்கு யாழ்.கட்டளைத்தளபதி மஹிந்த ஹத்துருசிங்க மறுப்பு தெரிவித்துள்ளதுடன் குறித்த கருத்துக்கு கண்டனத்தையும் வெளியிட்டுள்ளார்.

மேலும் ஜே.வி.பி. கிளர்ச்சிக் குழுவின் இரண்டு தமிழ் உறுப்பினர்களான லலித்குமார் வீரராஜ், குகன் ஆகியோர் கடந்த டிசெம்பர் 9 ஆம் திகதி முதல் காணாமல் போனமை தொடர்பில் கருத்துரைத்த ஹத்துருசிங்க அவர்களை கண்டுபிடிக்க பொலிஸாருக்கு படையினரும் உதவி வருவதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாண கட்டளை தளபதி ஹத்துருசிங்கவே வடக்கில் இடம்பெறுகின்ற ஆட்கடத்தல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்றும் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் மாதம் ஒன்றுக்கு 30 ஆயிரம் ரூபாவை கப்பமாக பெற்று வந்ததாகவும் சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)



சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 87 ஆவது பிறந்த தின நிகழ்வின்போது சிவத்தமிழ் விருது மூதறிஞர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்டது. இவ்விருதினை மூதறிஞர்களான கலாபூஷணம் ஏ.வி.ஆனந்தன், சைவத்திரு பொன்னையா செல்லப்பா, சிற்பி சரவணபவன், பண்டிதை சிவபாக்கியம், மூத்த புகைப்பட ஊடகவியலாளர் சங்கரம்பர் கதிரவேலு ஆகியோர் பெற்று அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

# இன்டர்போல் உடன்படிக்கையை இலங்கை மீறி செயற்பட்டுள்ளது

## கே.பி.விடயம் குறித்து ஆங்கில ஊடகம் தகவல்

சர்வதேச பொலிஸாரான இன்டர்போலுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை இலங்கை மீறிச் செயற்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனுக்கு எதிராக இன்டர்போல் பிடிவிறாந்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைச் சம்வத்துடன் குமரன் பத்மநாதனுக்கு தொடர்பு இருப்பதாக இந்தியா இன்டர்போலிடம் அறிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் இன்டர்போல் இவருக்கு எதிராக பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.

குமரன் பத்மநாதனுக்கு எதிராக இன்டர்போல் விடுத்துள்ள பிடிவிறாந்து உத்தரவினை தொடர்ந்தும் கவனத்திற் கொள்ளப்போவதில்லை என புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இன்டர்போல் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டவர்களை கைது செய்து ஒப்படைப்பது குறித்து சட்டமா அதிபர் திணைக்களம் ஆலோசனை வழங்க வேண்டும் என புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அவர் தொடர்பான விசாரணைகள் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குமரன் பத்மநாதனை இன்டர்போலிடம் ஒப்படைக்காமை அந்த அமைப்புடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த மீறலாகும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் சட்ட ஆலோசகர் கலாநிதி நோயல் டயஸ் குறிப்பிட்டுள்ளார்.

ராஜீவ்காந்தி படுகொலையுடன் தொடர்புடைய குமரன் பத்மநாதனை அரசாங்கம் இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். (அ-2)

# ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமைச்சர் குழு ஆராய்கின்றது

## ஜனாதிபதியின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பரிந்துரைகள் அமுல்படுத்தப்படும் என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

பரிந்துரைகளை எவ்வாறு அமுல்படுத்துவது என்பது குறித்து அமைச்சர்கள் குழு ஏற்கனவே ஆராய ஆரம்பித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் பாதுகாப்பு அமைச்சு, சட்ட மா அதிபர் திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து பரிந்துரைகளை அமுல்படுத்துவது குறித்து ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சி இந்தப் பரிந்துரைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலைமை குறித்து ஜனாதிபதியின் செயலாளரிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சி என்ற ரீதியில் ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயவுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)

# இரு பிக்குகள் உட்பட நால்வர் கைது

(கொழும்பு)

கொள்ளை மற்றும் கொலைகளுடன் தொடர்புடைய நால்வர் வலஸ்முல்லையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

தங்காலை குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களும் மேலதிக விசாரணைக்காக மித்தெனிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற இராணுவ சிப்பாய் என்பதுடன் மற்றையவர் இராணுவத்தில் உள்ளவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏனைய இருவரும் பௌத்த குருமார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து ரி56 ரக தானியக்க துப்பாக்கி ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட துப்பாக்கி, இரண்டு மாதங்களுக்கு முன்னர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரிடம் இருந்து களவாடப்பட்டது என அடையாளம் காணப்பட்டுள்ளது. (அ-2)

## உத்தரகண்டில் ஊழல்பெருக பாரதிய ஜனதாவே காரணம்



(அல்மோரா)

உத்தரகண்டில் ஊழல் பெருக பாரதிய ஜனதா அரசுதான் காரணம் என்று சோனியா காந்தி குற்றம் சாட்டினார்.

உத்தரகண்டில் எதிர்வரும் 30 ஆம் திகதி சட்டப் பேரவை தேர்தல் நடைபெற உள்ளது. அல்மோராநகரில் காங்கிரஸ் தலைவி சோனியா காந்திநேற்று முன்தினம்பிரசாரம் செய்தார். அப்போது அவர் உரையாற்றுகையில்,

உத்தரகண்டில் ஆட்சி நடத்தி வரும் பா.ஜ. மக்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்த முயற்சி செய்கின்றது. மலைப்பகுதியில் வசிப்பவர்கள், சமவெளியில் வசிப்பவர்கள் இடையே மோதல் ஏற்படுத்த அரசு சதி செய்கிறது. எல்லா மலைப்பகுதியிலும் மின்சார வசதி செய்து தரப்படும் என்று கூறி பா.ஜ.க வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால் இதுவரை எல்லா மலைப்பகுதிக்கும் மின்சார வசதி கிடைக்கவில்லை.

மலைப்பகுதியில் வாழும் மக்களுக்கு சூரியனும் நிலாவும் போதும் என்று அவர்கள் நினைத்துவிட்டார்கள் போலிருக்கின்றது.

அதேபோல் புதிதாக தொழில் தொடங்கப்படுவதையும் பா.ஜ அரசு தடுத்தது. ஏற்கனவே உள்ள தொழில் சாலைகளையும் அழிக்கும் முயற்சியில் அரசே ஈடுபட்டது. இன்றைக்கு மாநிலத்தின் மூலை முடுக்கெல்லாம் ஊழல் நடப்பதற்கு பா.ஜ. அரசுதான் காரணம். ஊழல் காரணமாக முதல்வரையே மாற்ற வேண்டிய நிலைக்கு அந்த கட்சி தள்ளப்பட்டது. அப்படிப்பட்ட ஆட்சி உங்களுக்கு வேண்டுமா. பொய்யான வாக்குறுதிகளை காங்கிரஸ் அளிக்காது வாக்குறுதியை கண்டிப்பாக நிறைவேற்றுவோம். இந்த தேர்தலில் பா.ஜ.வை மக்கள் தோற்கடிக்க வேண்டும் என்றார். (அ-2)

## ஹசாரே குழுவினர் மீது சப்பாத்து வீசமுயன்ற நபர் கைதானார்

தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த அன்னா ஹசாரே குழுவினர் மீது சப்பாத்து வீச முயன்றவர் கைது செய்யப்பட்டார். இதனால் கூட்டத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராகவும் வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள இந்தியர்களின் கறுப்பு பணத்தை மீட்டுக் கொண்டு வர வேண்டும் என்று காந்தியவாதி அன்னா ஹசாரே குழுவினர் போராடி வருகின்றனர்.

கடந்த பாராளுமன்ற கூட்டத்தொடரில் லோக்பால் மசோதா நிறைவேற்றப்படாவிட்டால் 5 மாநில சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக பிரசாரம் செய்யப்போவதாக அன்னா ஹசாரே குழுவினர் அறிவித்தனர்.

திட்டமிட்டபடி நேற்று முன்தினம் அன்னா ஹசாரே குழுவினர் தேர்தல் பிரசாரத்தை தொடங்கினர். உத்தரகண்ட் மாநில டேராடூன் நகரத்தில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் இந்த கூட்டம் நடந்தது.

அன்னா ஹசாரே கலந்து கொள்ளவில்லை. ஆனால் அவரது குழுவைச் சேர்ந்த பலர் மேடையில் இருந்தனர். ஏராளமான பொதுமக்கள் அந்த மண்டபத்தில் குழுமி இருந்தனர். கூட்டத்தில் ஒருவர் உரைநிகழ்த்திக் கொண்டிருந்தார். அப்போது அன்னா ஹசாரே ஆதரவு தொண்டர் போல் குல்லாய் அணிந்திருந்த ஒருவர் திடீரென கூட்டத்தில் இருந்து எழுந்து சற்றும் எதிர்பாராத வகையில் அவர் தான் வைத்திருந்த சப்பாத்து ஒன்றைபொதுக்கூட்டமேடையை நோக்கி வீசினார். ஆனால் அந்த சப்பாத்து அங்குசெல்லவில்லை. பாதியிலேயே விழுந்து விட்டது. அப்போது கூட்டத்தில் பெரும் பரபரப்பும் பதற்றமும் நிலவியது. உடனே அங்கிருந்த பொலிஸார் விரைந்து அந்த ஆசாமியை கைது செய்தனர். (அ-2)

## கச்சதீவில் தேசியக்கொடி ஏற்றப்படும்-இ.ம.கட்சி

இந்து மக்கள் கட்சி சார்பில் கச்சதீவில் எதிர் வரும் 26 ஆம் திகதி தேசியக் கொடி ஏற்றப்படும் என்று அந்தக் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் தெரிவித்துள்ளார்.

இந்து மக்கள் கட்சி (தமிழகம்) சார்பில் சுவாமி விவேகானந்தர் பிறந்தநாளான கடந்த 12 ஆம் திகதி முதல் இந்து சமய ஆன்மீக பிரசார யாத்திரை நடைபெற்று வருகிறது. இதன்படி 3 நாட்கள் பயணமாக இந்தப் பிரசார யாத்திரை நேற்று முன்தினம் குளித்தலை பகுதிக்கு வந்தது.

இதன்போது கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் செய்தியாளர்களிடம் கூறியது,

108 நாட்கள் நடைபெறும் இந்த யாத்திரை ஏப்ரல் 14 ஆம் திகதி அம்பேத்கர் பிறந்தநாளில் நிறைவடைகிறது.

யாத்திரையில் மதுவிலக்கு, சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு, ஊழல் எதிர்ப்பு இயக்க ஆதரவு, சுதேசி கொள்கை ஆகியவற்றை வலியுறுத்தி பிரசாரங்களை வழங்கி வருகிறோம். தமிழகத்தில் மும்மொழிக் கொள்கையை அமுல்படுத்தக்கோரி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நாளை மறுதினம் கோரிக்கை மனு அனுப்பும் போராட்டம் நடத்தப்படும்.

இந்தியாவின் ஒரு பகுதியான கச்சதீவில் எதிர்வரும் 26ஆம் திகதி குடியரசு தினத்தன்று மத்தியஅரசு சார்பில் தேசியக் கொடியை ஏற்ற வேண்டும். கச்சதீவை மீட்டெடுக்க முதல்வர் அறிவித்துள்ளார். அறிவிப்பின் ஒரு பகுதியாக அந்தத் தீவில் தேசியக் கொடியேற்ற நாங்கள் தொடர்ந்து முயற்சித்து வருகிறோம். அதன்படி எதிர்வரும் 26 ஆம் திகதி கட்சியின் மாநிலச் செயலர் பவன் நாகேந்திரன் தலைமையில் தேசியக் கொடி ஏற்றப்படும் என்றார். (அ-2)

## அமெரிக்காவுக்கு சுற்றுலா வாங்க; இந்தியர்களுக்கு ஒபாமா அழைப்பு



உலகின் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் நாடு என்ற பெருமையை அமெரிக்கா தக்கவைத்து கொள்ள, இந்திய சுற்றுலா பயணிகள் உதவ வேண்டும் என்று ஜனாதிபதி ஒபாமா அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறியுள்ளதாவது.

உலகின் அதிக சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் நாடாக அமெரிக்கா உள்ளது. அடுத்துவரும் ஆண்டுகளில் அதை தக்கவைத்துக் கொள்ள இந்தியா,சீனா, பிரேசில் போன்ற வேகமாக வளரும் நாட்டு மக்களின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. இந்தியா போன்ற இளைஞர்கள் அதிகமுள்ள நாடுகளில் இருந்து மேலும் அதிக பயணிகள் அமெரிக்கா வர வேண்டும். வருமானம் அதிகரித்து வரும் இந்திய நடுத்தர பிரிவினர் வெளிநாட்டு சுற்றுலாவுக்கு அமெரிக்காவை தேர்வு செய்யலாம். அதற்கேற்ப சுற்றுலா விசா நடைமுறைகளை தளர்த்த அரசு பரிசீலிக்கும். இவ்வாறு ஒபாமா கூறியுள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை மூலம் அமெரிக்காவில் 75 இலட்சம் வேலைவாய்ப்பு உருவானது. சுற்றுலாத்துறை வருவாய் அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.7 சதவீத பங்கு வகித்தது குறிப்பிடத்தக்கது. (அ-2)

### பாரதச் செய்தி

## நக்சலைட்டுக்கள் தாக்கு; 13 பொலிஸார் உயிரிழப்பு

(ராஞ்சி)

ஜார்க்கண்ட் மாநிலத்தில் நக்சலைட்டுக்கள் நடத்திய கண்ணிவெடி தாக்குதலில் சிக்கி 13 பொலிஸார் உயிரிழந்தனர். நீண்டகாலமாக மௌனமாக இருந்த மாவோ நக்சலைட்டுக்கள் இந்த வெறி தாக்குதலை நடத்தியிருக்கின்றனர். சம்பவ இடத்தில் உயிரிழந்த பொலிஸாரை மீட்கும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

ஜார்க்கண்ட், சட்டீஸ்கர் மாநிலத்தில் நக்சலைட்டுகள் ஆதிக்கம் சமீபகாலமாக அடங்கியிருந்தது.

இந்நிலையில் கார்வா மாவட்ட வனப்பகுதிக்குள் நக்சலைட்டுகளை பிடிக்கும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் கண்ணிவெடியில் சிக்கினர்.

இந்த சம்பவம் குறித்து மாவட்ட எஸ்.பி. கூறுகையில் பண்டாரியா பொலிஸார் எல்லைக்குள் கண்ணிவெடி செயல் இழக்க செய்யும் வாகனத்தில் சென்ற போது இந்த சம்பவம் நடந்துள்ளது. முழு விபரம் இன்னும் வரவில்லை. பலர் சிக்கியிருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது என்றார். (அ-2)

## குடியரசு தினத்தை முன்னிட்டு டில்லியில் பலத்த பாதுகாப்பு

இந்தியாவில் குடியரசு தினம் எதிர்வரும் 26 ஆம் திகதி கொண்டாடப்படுவதால் தலைநகர் புதுடில்லியில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது.

நாட்டின் குடியரசு தினத்தை முன்னிட்டு தலைநகர் புதுடில்லியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தீவிரவாத அசம்பாவித சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க 25 ஆயிரம் பொலிஸார் புதுடில்லியில் முழுவதும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

160 இரகசிய புகைப்பட கருவிகள் மூலம் கண் காணிப்பு பணியிலும் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இராணுவத்தினின் அணிவகுப்பு நடைபெறும் இடத்தில் விமான எதிர்ப்பு பீரங்கி நிறுத்தப்பட்டுள்ளதுடன் அதிரடிப்படை பொலிஸாரும் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளனர். (அ-2)

## வேண்டப்பட்ட நாடு என்ற அந்தஸ்தை இந்தியாவுக்கு வழங்க காலம்தேவை

### பாகிஸ்தான் தெரிவிப்பு

இந்தியாவுக்கு மிக வேண்டப்பட்ட நாடு அந்தஸ்து வழங்குவதற்கு ஓராண்டிற்கு மேலாகும் என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தில் இரு நாடுகள் சில சலுகைகளின் அடிப்படையில் பரஸ்பரம் வழங்கிக் கொள்வது தான் மிக வேண்டப்பட்ட நாடு அந்தஸ்து. இது உலக வர்த்தக கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று.

கடந்த 1996 லேயே பாகிஸ்தானுக்கு இந்த அந்தஸ்தை இந்தியா வழங்கிவிட்டது. ஆனால் தற்போது வரை இந்த அந்தஸ்தை இந்தியாவுக்கு பாக். வழங்கவில்லை. கடந்தாண்டு நவம்பரில் பாக். தகவல் துறை அமைச்சர் பிர் தவுஸ் ஆஷிக் அவான் இந்தியாவுக்கு மிக வேண்டப்பட்ட நாடு அந்தஸ்தை பாக். அமைச்சரவை வழங்கி விட்டதாக அறிவித்தார். ஆனால் சமீபத்தில் வர்த்தக அமைச்சர் மக்தூம் அமீன் பாகிம் அதை மறுத்தார்.

இதுகுறித்து அவர் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் விளக்கமாக கூறியதாவது, இந்தியா- பாக். இடையிலான வர்த்தகத்தில் இடம் பெற முடியாத பொருட்கள் குறித்த எதிர்மறைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பட்டியலில் உள்ள பொருட்களை இந்தியாவுக்க அனுப்ப முடியாது. இப்படி ஒரு நிலையில் இந்தியாவுடன் வர்த்தகம் மேற்கொள்வது உலக வர்த்தககழகத்தின் விதிகளுக்கு எதிரானது. ஆனால் வர்த்தகத்தில் இடம் பெற முடியாத பட்டியலில் உள்ள பொருட்கள் படிப்படியாக நீக்கப்படும். அதன் இறுதியில் தான் இந்தியாவுக்கு மிக வேண்டப்பட்ட நாடு அந்தஸ்து வழங்கப்படும். அடுத்த மாதத்திற்குள் எதிர்மறைப் பட்டியல் தயாரிக்கப்படும்.

அதேநேரம் இந்தியாவுடனான பல துறை பேச்சுவார்த்தையின் விளைவுகளும் இந்த வர்த்தக சுமுகமாக்கலில் எதிரொலிக்கத்தான் செய்யும் என்றார். (அ-2)



டில்லி காங். பொதுச் செயலாளர் ராகுல், பா.ஜ.க தலைவர் உமாபாரதி பற்றி கூறிய கருத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் நேற்று முன்தினம் பா.ஜ.வின் பெண்கள் அமைப்பினர் டில்லியில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை தடுக்க போட்ட வேலி தடை மீது ஏறி எதிர்ப்பு கோஷம் இடும் பெண்ணைப் படத்தில் காணலாம்.

# பாக்லாந்து தீவுகளை ஒப்படைக்குமாறு பிரி.னை எதிர்த்து மக்கள் போராட்டம்



ஆர்ஜெண்டீனாவின் தலைநகரான புயுனாஸ் எர்ஸில் உள்ள பிரிட்டன் தூதரகத்திற்கு முன்பு பிரிட்டன் கொடியை எதிர்த்து பாக்லாந்து தீவுகளை ஒப்படைக்குமாறு மக்கள் போராட்டம்நடத்தியுள்ளனர்.

ஆர்ஜெண்டீனா இத் தீவுகளை அதன் பழைய பெயரில் லாஸ் மால்வினால் என்று அழைத் தது.

ஆனால் பிரிட் டனோ அந்த தீவுகளில் வாழும் மக்கள் பிரி ட்டிஷ் ஆட்சியை விரும்புகின்றனர் என தெரிவித்தது. எதிர்வரும் பெப்ரவரி மாதம் உலங்குவானூர்தி மீட்புப் படையின் இராணுவப் பயிற்சியை மேற்கொள்வதற்காக இளவரசர் வில்லியம் வருகை தரவிருக்கிறார்.

இவ்வாறு பிரிட்டன் இங்கு தனது இராணுவத்தை நிறுத்தி வைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறியும் மக்கள் போராட்டம் நடத்தினர்.தீவுகளில் வாழும் மக்களின் முடிவுக்கு ஆர்ஜெண்டீனா அதைப் பெற நினைப்பது காலனி ஆதிக்கமாகும் என்று கடந்த புதன் கிழமை பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் கூறியதை எதிர்த்து ஆர்ஜெண்டீனா தலைவர்கள் இப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். கமரூன் தான் மேலும் இராணுவத்தை கொண்டு வந்து பாக்லாந்தில் நிறுத்தப் போவதாக தெரிவித்துள்ளார்.

பாக்லாந்து கடலின் அருகே பிரிட்டிஷ் நிறுவனங்கள் எண்ணெய்க் கிணறுகளை தோண்டி வருகின்றன. எண்ணெய் கிடைக்கும் என்ற ஆசையினால் பாக்லாந்தை பிரிட்டன் ஆர்ஜெண்டீனாவிடம் ஒப்படைக்க மறுக்கின்றது. (அ-2)

# மெக்சிக்கோவில் நிலநடுக்கம்

(மெக்சிகன்சிட்டி)

மெக்சிக்கோவில் 6.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் பொது மக்கள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர்.

மெக்சிக்கோவில் கௌதமாலா எல்லையை ஒட்டியுள்ள பசுபிக் கடல் பகுதியில் சியாபாஸ் மாகாணம் உள்ளது. அங்குள்ள மபாஸ் டெபெக் நகரில் நேற்று முன்தினம் மதியம் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் வீடுகள் குலுங்கின.யன்னல்கள் அசைந்தாடின.

எனவே பொதுமக்கள் பதற்றமும் அச்சமும் அடைந்தனர்.வீடுகளை விட்டு வெளியேறி தெருக்களில் ஓட்டம் பிடித் தனர்.

இதற்கிடையே ரிக்டர் அளவில் 6.2 ஆக நில நடுக்கம் பதிவானதாக அமெரிக்க புவியியல் சர்வவேமையம் அறிவித்தது.

பூமிக்கு அடியில் 40 மைல் ஆழத்தில் இது உருவானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விபரங்கள் மற்றும் உயிரிழப்பு சம்பவங்கள் குறித்த தகவல்கள் எதுவும் உடனடியாக வெளியாகவில்லை.

மபாஸ் டெபெக் நகரில் ஏற்பட்ட நிலநடுக்கம் சியாபாஸ் நகரம் முழுவதும் உணரப்பட்டது. பல மைல் தொலைவில் உள்ள எல் சல்வடோர் நாட்டின் தலைநகரம் சான் சல்வடோரிலும் பூமி குலுங்கியது. (அ-2)

# இஸ்ரேல் ஈரானைத் தாக்கினால் மத்திய கிழக்கில் யுத்தம் ஏற்படும்

## பிரான்ஸ் எச்சரிக்கை

இஸ்ரேல் ஈரானைத் தாக்கினால் மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்படும் போரை யாராலும் தடுக்க இயலாது என்று பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கொலஸ் சர்கோசி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சர்கோசியை பிரான்சின் உயரதிகாரிகள் சந்தித்துப்பேசினர். அப்போது ஆப்கானிஸ்தானில் கொல்லப்பட்ட நான்கு இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அப்போது சர்கோசி பேசுகையில், தமது வீரர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை தொடர்ந்தால் ஆப்கானிஸ்தானின் இராணுவத்துக்குப் பிரான்ஸ் அளித்துவரும் உதவியும் பயிற்சியும் நிறுத்தப்படும்.மேலும் பிரான்ஸ் இராணுவம் முன்கூட்டியே தாய்நாடு திரும்ப நேரிடும் என்று எச்சரித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஈரான்



அணு ஆயுதங்களின் மீது கொண்டுள்ள ஆசையின் காரணமாக போர் உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இஸ்ரேலிய அரசியல்வாதிகள் அச்சுறுத்தியபடி ஈரான்மீது இஸ்ரேல் போருக்குத் தயாராகி வருகிறது.

இதனால் இரண்டு நாடுகளுக்கும் இடையி லான பிரச்சினை எதுவும் தீரப்போவதில்லை. மாறாக உலகம் முழுவதும் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் போரும் குழப்பமும் உரு வாகும் என்றார்.

மேலும் ஈரானின் எண்ணெய் இறக்குமதியைத் தடைசெய்தும் ஈரானிய மத்திய வங்கியின் சொத்துக்களை முடக்குவதுமான பொருளாதாரத்தடைகளை விதிக்க ஐக்கிய நாடுகள் முன்வரவேண்டும்.

சீனாவும் ரஷ்யாவும் ஐ.நா. பாதுகாப்புக் குழு ஈரான் மீது எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். (அ-2)

## உலக தரிசனம்

# நேட்டோ படைகளுக்கு செல்லும் பொருட்களுக்கு சுங்க வரி அறவீடு

## பாகிஸ்தான் தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ படைகளுக்கான பொருட்கள் செல்லும் பாதையை மீண்டும் திறக்க பாகிஸ்தான் முடிவு செய்துள்ள நிலையில் அவ்வாறு செல்லும் ஒரு வாகனத்திற்கு ஆயிரம் டொலர் வீதம் சுங்க வரி வசூலிக்கவும் திட்டமிட்டுள்ளது.

பாக். ஜனாதிபதியாக முஷாரப் இருந்த போது பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் அவர் அமெரிக்காவுடன் கைகோர்த்தார். அந்த ஒப்பந்தத்தில் ஆப்கானில் உள்ள நேட்டோவுக்கு பாக். வழியாக பொருட்கள் விநியோகம் நடத்தப்படவேண்டும் என்பதும் ஒன்று.

கடந்தாண்டு நவம்பரில் நடந்த நேட்டோ தாக்குதலால் கோபமடைந்த பாகிஸ்தான் அரசு பாக். வழியாக ஆப்கானில் உள்ள நேட்டோவுக்கு பொருட்கள் செல்லும் வழியை அடைந்து விட்டது.இதனால் நேட்டோவுக்கான பொருட்கள் விநியோகம் அமெரிக்காவுக்கு பெரும் செலவை உண்டாக்கி வருகிறது.

இந்நிலையில் நேட்டோவுக்கான வழியைத் திறந்துவிட பாக். முடிவு செய்துள்ளது. அதே நேரம் ஒரு வாகனத்திற்கு ஆயிரம்டொலர் வீதம் வசூலிக்கப்படும் என கறாராக அமெரிக்காவிடமும் தெரிவித்து விட்டது. (அ-2)

# அமெரிக்காவுடன் தலிபான்கள் இரகசிய உடன்பாடு செய்யலாம்

## ஆப்கான் சந்தேகம்

அமெரிக்க அரசுடன் தலிபான்கள் இரகசிய உடன்பாடு செய்து கொள்ள வாய்ப்புள்ளதாக ஆப்கான் இராணுவத்தளபதி அப்துல் கரீம் குர்ராம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தலிபான்களுடன் அமைதிக்கான பேச்சு நடத்துவதற்காக கட்டாரில் அலுவலகம் திறக்க அமெரிக்கா அனுமதித்தது.இந்த அலுவலகத்தை ஆப்கானில் திறக்கவே நாங்கள் விரும்பினோம். இருப்பினும் தலிபான்களுடனான போர் முடிவுக்கு வர விரும்பியே நாங்கள் அதனை ஆதரித்தோம்.

அமைதிப்பேச்சுவார்த்தை குறித்து அமெரிக்க அரசு ஆப்கான் அரசுக்கு சரியான தகவல்களை அளிப்பதில்லை.

பாகிஸ்தானில் வசித்து வரும் தலிபான் தலைவர்கள் கட்டாரிலுள்ள அலுவலகத்துக்குச் சென்று வருகின்றனர்.இதற்கு பாகிஸ்தான் அதிகாரிகள் உதவி புரிகின்றனர். தலிபான்களுடனான அமைதிப் பேச்சுவார்த்தையில் பாகிஸ்தான் பங்கேற்கிறதா என அமெரிக்கா எங்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். ஆனால் அதுவரை அமெரிக்கா இதற்கான பதிலை அளிக்கவில்லை.

தலிபான்களுடனான அமைதிப் பேச்சுவார்த்தையில் ஆப்கான் தலைமை இல்லையெனில் அது ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையாக அமையாது என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)



எகிப்து நாட்டில் தற்போது இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள ஆட்சியை தேர்ந்தெடுக்கப்பட்ட அரசிடம் ஒப்படைக்க வலியுறுத்தி தலைநகர் கெய்ரோவில் உள்ள தஹ்ரீர் சதுக்கத்தில் பொது மக்கள் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டதைப் படத்தில் காணலாம்.

# சிரிய ஜனாதிபதிக்கு எதிராக தொடரும் போராட்டம்

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் அரசுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இப்போராட்டம் கடந்த 10 மாதங்களுக்கும் மேலாக நடந்து வருகிறது. ஆனால் பிரச்சினை இன்னும் முடிவுக்கு வரவில்லை.

இதற்கிடையே அங்கு குண்டுவெடிப்பு சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. அதில் அல்கொய்தா தீவிரவாதிகள் ஈடுபட்டுள்ளனர். ஆனால் அவர்களை அடக்க ஆசாத் அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதற்கிடையே கடந்த ஒக்டோபரில் தலைநகர் டமாஸ்கஸ்சில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்கும் அதிகாரிகளுக்கும் மிரட்டல் தொடர்ந்து வந்தது.

எனவே தூதர் ராபர்ட் போர்டுகடந்த மாதம் அமெரிக்கா திரும்பினார். இந்த நிலையில் அமெரிக்க தூதரகம் முன்பு சமீபத்தில் கார் குண்டு தாக்குதல் நடந்தது. இதனால் தூதரக அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுவதாக அமெரிக்கா கருதுகிறது. எனவே சிரியாவில் இருந்து அமெரிக்க தூதரகத்தை மூட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (அ-2)

# வீரவன்சவை பயன்படுத்தி ஜே.வி.பியை துண்டாட ஜனாதிபதி முயற்சித்தார்

## விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

விமல் வீரவன்சவைப் பயன்படுத்தி ஜே.வி.பியை துண்டாடுகின்ற நடவடிக்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீவிரமாக ஈடுபட்டு வந்திருக்கின்றார் என்று அமெரிக்கா கண்டு கொண்டுள்ளது.

ஜே.வி.பி கடந்த 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜனாதிபதி மஹிந்தவுக்கான ஆதரவை உத்தியோகபூர்வமாக விலக்கிக் கொண்டது.இந்நிலையில் ஜே.வி.பியை அவரது மறைமுக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஜனாதிபதி தீர்மானித்து விட்டார்.

இதன் மூலம் ஜே.வி.பியின் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளை முறியடிக்கலாம் என்று கண்டு கொண்டனர்.

இத்திட்டத்துக்கு கருவியாக ஜே.வி.பிஜ சேர்ந்து இருந்த விமல் வீரவன்ச பயன்படுத்தினார்.

ஜே.வி.பியை பலவீனப்படுத்துகின்றமை ஜே.வி.பி தலைமையின் கட்டமைப்பை குலைக்கின்றமைக்கு விமலை பாவித்துக் கொண்டார்.

மஹிந்தவும் விமலும் சேர்ந்து மிகவும் வெற்றிகரமாக ஜே.வி.பி பிரமுகர்கள் பலரின் அரசியலை சிதைத்து விட்டனர்.ஜே.வி.பி தலைவராக விமலை ஆக்குகி ன்றமை மஹிந்தவின் விருப்பமாக உள்ளது.

ஏனெனில் விமலை ஜே.வி.பி தலைவர் ஆக்குகின்றமை மூலம் ஜே.வி.பியின் எதிர்ப்பு நடவடிக்கைகளில் இருந்து விடுபடுகின்றமை சாத்தியம் ஆகும் என்று ஜனாதிபதி நம்புகின்றார்.

சிறிபால அமரசிங்க,நந்தன குணதிலக, குமார் குணரட்ணம் என்று ஜே.வி.பி முக்கியஸ்தர்களின் அரசியல் மஹிந்த-விமல் கூட்டால் சிதைக்கப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக குமார் குணரட்ணம் ஊழல் குற்றச் சாட்டுக்களுக்கு பயந்து நாட்டை விட்டு குடும்பத்துடன் ஓடி இருக்கின்றார்.

கொழும்பில் உள்ள தூதரகத்தில் இருந்து கடந்த 2007 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி தூதுவர் ரொபேட் ஓ பிளேக்கால் அனுப்பி வைக்கப்பட்ட இராஜதந்திர ஆவணம் ஒன்றில் இருந்து விக்கிலீக்ஸ் மூலம் இத்தகவல்கள் வெளியாகி உள்ளீன. (அ-2)

## திருக்குறள் தமிழ் இலக்கிய திறன் போட்டிகள்

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத்தினால் வருடாந்தம் கிளி. மாவட்ட பாடசாலைகளுக்கிடையே திருக்குறள் தமிழ் இலக்கிய திறன் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.

இப்போட்டிகள் ஐந்து பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது. நாவன்மை போட்டியுடன் நாட்டுக்கூத்து, இலக்கிய நாடகம், குமுதாய நாடகம், வரவேற்பு ஆடல் போன்ற பத்திற்கும் மேற்பட்ட போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் அவ்வவ் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் இதற்கான முடிவுத் திகதி நாளை மறுதினம் புதன்கிழமையென்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-7-84)

# திறைசேரி ஊடாக புலமைப்பாிசில்

## இலங்கை வலியுறுத்து

இலங்கை அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் அனைத்து வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களும் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் பணியகத்திற்கூடாகவே வழங்கப்பட வேண்டுமெனவும் இப்புலமைப் பரிசிலை பெறுவோருக்கு நேரடியாக அவை வழங்கப்படகூடாது எனவும் இந்தியாவிடம் இலங்கை தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சுடன் கலந்துரையாடிய பின்னர் இலங்கையின் இந்நிலைப்பாடு இந்தியாவுக்கு அறிவிக்கப்பட்டதாக திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் மாப்பா பத்திரன தெரிவித்துள்ளார்.

நேரடியாக புலமைப்பரிசில்கள் வழங்கப்படுவது குறித்து நாம் சில விசாரணைகளை நடத்திய பின் இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு இந் நடைமுறைகுறித்து அறிவித்தோம் என அவர் கூறினார். எனினும் இங்கு விசாரணை நடத்தப்பட்டது என்பதை அவர் தெரிவிக் கவில்லை.தேவையானால் சம்பந்தப்பட்ட முகவரகங்களும் அழைப்பின் பிரதியொன்று அனுப்பப்பட்டலாம் எனவும் ஆனால் அமைப்பின் மூலப்பிரதி திறைசேரியின் வெளிநாட்டு வள ங்கள் பணியகத்திற்கே அனுப்பப்பட வேண்டு மெனவும் இந்திய உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்ததாக அவர் கூறினார். (அ-2)

# செனட் சபையால் நாட்டுக்கு பயன் கிடைக்கப்போவதில்லை

## யோகராஜன் எம்.பி

உத்தேச செனட் சபைக்கு ஜனாதிபதி உறுப்பினர்களை நியமித்தால் அது ஓய்வு பெற்ற அரசியல்வாதிகளின் முகாமாகவே அமையும். ஆதலால் நாட்டுக்கு எதுவித பயனும் ஏற்படப்போவதில்லையென ஐ.தே.க கட்சி எம்.பி.ஆர்.யோகராஜன் நேற்று முன் தினம் தெரிவித்துள்ளார்.

செனட் சபை தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது.

இந்தியாவிலுள்ள மேல் சபையைப் போல் இலங்கையில் செனட்சபை அமைத்தால் அதை வரவேற்கலாம். மாகாண சபைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் செனட் சபை அமைக்கப்பட வேண்டும். அப்போது இனப்பிரச்சினைத் தீர்வுக்கு செனட் சபை காத்திரமான பங்களிப்பை வழங்கக்கூடியதாகவிருக்கும்.

ஆனால் இப்போதுள்ள தகவல்களின் படி செனட் சபைக்கு ஜனாதிபதியே உறுப்பினர்களை நியமிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இது பயன்தரப் போவதில்லை இவ்வாறு அவர் கூறினார். (அ-2)

# காலத்தை இழுத்தடிக்கவே செனட் சபை திட்டம்

## ஐ.தே.க பொதுச் செயலாளர் திஸ்ஸ

இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்றை காண்பதை இழுத்தடிக்கும் நோக்கிலேயே ஜனாதிபதி செனட் சபைத் திட்டத்தை முன் வைத்துள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று முன்தினம் தெரிவித்தார். செனட் சபை குறித்தும் இனப்பிரச்சினை தீர்வு குறித்தும் அவர் தொடர்ந்து கூறியதாவது,

இனப்பிரச்சினை தீர்வு குறித்து அரசு இந்தியாவுக்கு ஒன்றைக் கூறுகின்றது. மேற்குலக நாடுகளுக்கு வேறொன்றைக் கூறுகின்றது. இங்கு எதுவுமே வழங்கமாட்டோம் என்ற தொனியில் கருத்து தெரிவிக்கின்றது. இது விடயத்தில் அரசு இதய சுத்தியுடன் செயற்படவில்லை.

உண்மைகளைக் கண்டறியும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல் படுத்தும்படி இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா அரசை வலியுறுத்தியுள்ளார். ஆனால் அரசு சிபாரிசுகளை அமுல்படுத்துவதில் சிரத்தை காட்டுவதாகத் தெரியவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்குமிடையில் நடைபெறும் பேச்சுக்களில் இனப்பிரச்சினை தீர்வுக்காக எட்டப்படும் இணக்கப்பாடுகளின் அடிப்படையில் தீர்வு வரைவொன்றை நாடாளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும். ஐக்கிய தேசியக்கட்சி அதற்கு முழுமையான ஆதரவை வழங்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார். (அ-2)

# சொத்துமோசடிகள் குறித்து ஆயிரம் முறைப்பாடுகள் பதிவு

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு


(கொழும்பு)


அரசியல் பலத்தை காட்டி பிறருக்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் காணிகளை கொள்ளையிட்ட சம்பவங்கள் குறித்து ஆயிரத்திற்கும் அதிகமான முறைப்பாடுகள் அரச பாதுகாப்பு அமைச்சுக்கு கிடைத்துள்ளதாக தெரிய வருகிறது.

இவற்றில் பெரும்பாலான முறைப்பாடுகள் வடக்கு, கிழக்கு, மத்திய, வடமேல், ஊவா மாகாணங்களில் இருந்து கிடைத்துள்ளன. இவ்வாறு காணி மற்றும் சொத்து கொள்ளையில் ஈடுபட்டவர்களை கைது செய்ய பொலிஸார் விசேட நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

இப்படியான சம்பவங்கள் குறித்து முறைப்பாடு செய்யுமாறு பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பொதுமக்களிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்படும் குற்றவாளிகளுக்கு தகுதி தராதரம் இன்றி உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்புச்செயலாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (அ-2)





யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரியின் தரம்-1 மாணவர்களின் கால்கோள்விழா அண்மையில் கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கௌரவிக்கப்பட்ட விழா நாயகர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

மற்றவர்கள் முடியாது என்று நினைக்கின்ற ஒரு விடயத்தை நீ முடித்துக்காட்டு அதுதான் உன் தலைமைத்துவத்தின் அடையாளம். – ஓர் அறிஞன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அப்துல் கலாமின் யாழ். வருகை

இந்திய தேசத்தின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்றார்.

ஒரு பெரும் விஞ்ஞானியை – நேர்மையாளரை தமிழ் மக்கள் அன்போடு வரவேற்கின்றனர்.

அணு விஞ்ஞானி டாக்டர் அப்துல் கலாம் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு வந்தார் என்று பெருமைப்படக்கூடிய வரலாறு அவரின் வருகையால் பதிவாகின்றது.

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற உயர் வாசகத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் டாக்டர் அப்துல் கலாம், மதம், மொழி, இனம் என்ற எல்லை கடந்து மானிடத்தை மதிக்கின்ற தத்துவஞானியாக விளங்குகின்றார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் டாக்டர் கலாமின் வாழ்வியல், அறிவியல், அரசியல், சமூகவியல், கல்வியியல் தொடர்பில் எங்கள் மாணவர்கள் ஒருகணம் சிந்திக்க வேண்டும்.

இராமேஸ்வரத்தில் ஏழைக் குடும்பத்தில் பிறந்து குடும்பத்தின் வருமானத்திற்காக சிறு வயதிலேயே தன் உழைப்பை வழங்கியதுடன் கல்வியிலும் அயராத முயற்சி செய்து உன்னதமான இலக்கை அடைந்த அவரது வாழ்வு ஒவ்வொரு மாணவனுக்கும் பாடமாக அமைய வேண்டும்.

மாணவர்கள், இளைஞர்கள் தொடர்பில் அதி கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். அதன் மூலமே, இந்த உலகை நல்வழிப்படுத்த முடியும் என்பதில் நம்பிக்கை கொண்ட டாக்டர் அப்துல் கலாம், இளைஞர்கள் கனவு காணவேண்டும். அந்தக் கனவு உறக்கத்தில் அல்ல என்றார்.

போருக்குப் பின்னான இன்றைய சூழலில் எங்கள் இளைஞர் சமூகம் வழிப்படுத்தல் இன்றி – எதிர்கால இலக்கு இன்றி– கலாசார பின்பற்றல் இன்றி தடம் புரளும் இந்நேரத்தில் டாக்டர் அப்துல் கலாம் இன்றைய நாளில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருவது காலத்தின் தேவையாகும்.

இங்குவரும் அவரின் கருத்துக்களை ஊன்றிக் கவனிக்க எங்கள் மாணவர் சமூகம் தயாராக வேண்டும்.

அதேநேரம் வெளிநாட்டவர்கள் யார் இங்கு வருகை தந்தாலும் அவர்கள் எங்கள் பிரச்சினை தொடர்பில், ஏதேனும் கதைப்பார்களா? தீர்வைப் பெற்றுத் தர முயற்சிப்பார்களா? என்ற எண்ணத்தோடு பார்க்கும் தமிழ் மக்கள், டாக்டர் அப்துல் கலாமின் வருகையிலும் அதே பார்வையைக் கொண்டுள்ளனர். டாக்டர் கலாம் எங்கள் இனப்பிரச்சினை தொடர்பில் ஏதேனும் கதைப்பாரா? என்ற எதிர்பார்ப்பு இருக்கவே செய்கின்றது.

போரில் எல்லாவற்றையும் இழந்து எதிர்கால நம்பிக்கை அற்றவர்களாக வாழும் ஈழத் தமிழ் இனத்தின் இந்த எதிர்பார்ப்பு நியாயமானதாக இருக்கலாம்.

எதுவாயினும் அரசியல் எதிர்பார்ப்புகளுக்கு அப்பால், நேர்மைமிகுந்த விஞ்ஞானியை; மனிதத்தை மதிக்கும் நியாயவாதியை; உள்ளதை உள்ளவாறு எடுத்தியம்பும் அறிஞனை; உலக மாந்தர் அனைவரும் சகல உரிமைகளும் பெற்றுவாழ வேண்டும் என்று நினைக்கின்ற ஒரு மனிதனை வரவேற்பதில் ஈழத் தமிழ் மக்கள் மகிழ்வடைகின்றனர்.

# தமிழ் சிவில் சமூகத்தின் அறிக்கையில் எந்தவித உள்நோக்கமும் கிடையாது

## மன்னார் ஆயர் கருத்து

(கொழும்பு)

தமிழ் சிவில் சமூகத்தினரால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு 13 ஆம் திகதி டிசெம்பர் 2011 அன்று வெளியிடப்பட்ட அறிக்கைக்கு பல விதமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வறிக்கை தமிழ் அரசியல் சமூகத்திற்குள் தமிழரது அரசியல் எதிர்காலம் தொடர்பில் முக்கிய விவாதமொன்றுக்கு வழிவகுத்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது.

எமது இந்த முயற்சிக்கு அரசியல்சாயம் பூசி தனிப்பட்ட ரீதியில் கையெழுத்திட்டுள்ளவர்களைத் தாக்கி எழுதியும் பேசியும் வருவோருக்கு எமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதைத் தவிர வேறொன்றையும் நாம் சொல்ல விரும்பவில்லை.

நாம் வெளியிட்ட அறிக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைப் பல வீனப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒன்றல்ல. மாறாக தமிழ்த் தேசியத்தினது அரசியலைப் பலப்படுத்துவதும் அதனூடாக அதனது தெரிவு செய்யப்பட்ட ஜனநாயகப் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைத் திடப்படுத்துவதுமே எமது நோக்கங்களாகும்.

எம்மில் பலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களோடு பலமுறை அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் காலத்திற்கு காலம் உரையாடி வந்துள்ளோம்.

ஆழ்ந்த யோசனையின் பின்னரே இவ்விடயங்கள் தொடர்பில் பகிரங்கமாக ஓர் வெளிப்படுத்தல் ஒன்றைச் செய்வதென்ற முடிபுக்கு நாம் வந்தோம். எந்தவொரு அரசியல் உள்நோக்கமும் எமக்கு இல்லை என்பது இவ்வறிக்கையானது ஒரு தேர்தலை முன்வைத்து முன்வைக்கப்பட்ட ஒன்றல்ல என்பதிலிருந்து தெளிவாகின்றது.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் பற்றி இவ்வறிக்கை கருத்துத் தெரிவித்த போதிலும் அத்தேர்தல் தொடர்பான எந்தவொரு உத்தியோகபூர்வ அறிவிப்பும் வெளிவராத சூழலிலேயே எமது அறிக்கை வெளிவந்திருப்பதை ஈண்டு நோக்க வேண்டும்.

தேர்தலில் த.தே.கூ நேரடியாகப் பங்குபற்றக்கூடாது என்று தெரிவித்திருந்தாலும் மாகாணசபை என்ற நிறுவனம் அரச சார்பு கொண்ட தமிழ்த் தேசிய எதிர்ப்பாளர்கள் வசம் போவதை அனுமதிக்க முடியாது என்று தெளிவாக அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதையும் அறிக்கையை நிதானமாக வாசித்தவர்கள் நிச்சயமாக கவனிக்காமல் விட்டிருக்க முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே அரசாங்கத்துடன் தொடர்ந்து பேசுவதற்கான மக்கள் ஆணையை தன்னகத்து கொண்டவர்கள். தாம் பெற்ற ஆணையின் பாற்பட்டு அவர்கள் செயற்பட வேண்டும் என்பதே எமது அறிக்கையின் சாராம்சம். இதனைச் சொல்வது எவ்வாறு ஒற்றுமைக்குக் குந்தகமாக அமையும் என்பதனை எங்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

ஒற்றுமை என்ற வெற்றுக் கோஷத்தில் பயனெதுமில்லை. எமது அறிக்கையில் நாம் குறிப்பிட்டவாறு தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான ஒற்றுமையானது தமிழ்த் தேசிய அரசியலைப் பலப்படுத்துவதாக அமைய வேண்டும்.

எந்த மக்கள் சார்பில் அரசியல் செய்யப்படுகின்றதோ அம்மக்களுடன் தொடர்ச்சியாக எமது அரசியல் தொடர்பில் உரையாடல் ஒற்றைச் செய்யும் போதே அந்த அரசியல் உண்மையானதாகவும் மக்கள் மயப்பட்டதாகவும் இருக்க முடியும்.

இதற்கான வெளியை உருவாக்குவதே எமது அறிக்கையின் நோக்கமாகும். எம்மோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பேச முன்வந்துள்ளதை நாம் வரவேற்கின்றோம். இது தொடர்பிலான இரா. சம்பந்தனது கடிதத்திற்கு நேற்று நான் பதிலொன்று அளித்துள்ளேன். சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும் த.தே.கூ. தலைவர்களுக்குமிடையிலான இந்த சந்திப்பு விரைவில் இடம்பெறுமென்பது எமது எதிர்பார்ப்பு. (அ-2)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(பூநகரி)

பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையில் பூநகரிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பூநகரிப் பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமார் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் சகல திணைக்களங்களைச் சேர்ந்த அலுவலர்களும் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-84)

# இலங்கைக்குள் நுழைய முயன்ற இருவர் கடற்படையால் கைது!

(கொழும்பு)

கடல் வழியாக இந்தியாவில் இருந்து இலங்கைக்குள் நுழைய முயற்சித்த இருவர் கடற்படையினாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலை மன்னார் பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் இவர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

இவர்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடல் வழியாக நீந்தி வர முயற்சித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பயிற்சி பெற்றவர் என்றும் இவர்கள் 2006ஆம் ஆண்டு இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு தப்பி ஓடியதாகவும் கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகளை நடத்தவென மன்னார் பொலிஸ் நிலையத்தில் சந்தேக நபர்கள் இருவரும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கூறினார். (எ-5)

# விண்ணப்பம் கோரல்

இலங்கைத் திறந்த பல்கலைகழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்திற்கு முகாமைத்துவ துறைக்கான ஒப்பந்த அடிப்படையிலான விரிவுரையாளர், ஒப்பந்த அடிப்படையிலான செயற்றிட்ட உதவியாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரி இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் நான்கு ஆண்டுகளுக்கு குறையாத முகாமைத்துவ பட்டத்தினை முதலாம் அல்லது இரண்டாம் தர சித்தியுடன் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் ஆங்கிலம், தமிழ் மொழிகளில் விரிவுரையாற்றக்கூடிய மொழித் தேர்ச்சியை பெற்றிருப்பதுடன் விண்ணப்பதாரி சிங்கள மொழித் தேர்ச்சியை கொண்டிருப்பது விசேட தகைமையாக கருதப்படும். அத்துடன் குறித்த விண்ணப்பதாரி தகவல் தொழில் நுட்பத்தில் விசேட புலமைத்துவம் பெற்றிருத்தல் அவசியமாகும்.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் சுயமாக தயாரிக்கப்பட்ட முழு விபரங்கள் அடங்கிய சுயவிபரக்கோவையை எதிர்வரும் 3-ம் திகதிக்கு முன்பாக, இணைப்பாளர், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், யாழ். பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்குமாறு யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் கேட்டுள்ளார். (எ)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



நாம் முன்னேற முதலில் நம்மிடம் நம்பிக்கை வேண்டும். பிறகு கடவுளிடம் நம்பிக்கை வேண்டும். தன்னிடம் நம்பிக்கை இல்லாதவன் கடவுளிட மும் நம்பிக்கை வைக்கமுடியாது.

உள்ளத்துக்குள் இருக்கும் அனைத்தையும் துறந்துவிடு, வைராக்கியத்தைக் கடைப்பிடி. இதுவே உண்மையான தியாகம். இது இல்லாமல் உனக்கு ஆன்மீகம் கிடையாது.

உள்ளம் தூய்மையானால் உலகமும் தூயதாகிவிடும். இந்த உண்மையை உலகுக்கு கூற வேண்டிய அவசியம் முன்பு என்றும் இல்லாத அளவுக்கு இப்போது ஏற்பட்டுள்ளது.

கல்வி, அறிவு, செல்வம், ஆட்பலம், வலிமை, தைரியம் என்று இயற்கை நமக்கு கொடுத்திருக்கின்ற அனைத்தும் பிறருக்கு கொடுப்பதற்குத்தான்.

வாழ்க்கையில் வெற்றி பெற்ற மனிதர்களைக் கவனி. ஒவ்வொருவரின் பின்னணியிலும் அளவற்ற கடமையுணர்வும் நேர்மையும் இருந்தே தீரும்.

ஆன்மீகத்திற்கு ஜாதியில்லை. ஜாதி என்பது வெறும் சமுதாய ஏற்பாடுதான்.

# வளர்ந்து வரும் பயோமெடிக்கல் இன்ஜினியரிங்

உயிரியல் மற்றும் மருத்துவத்துறைகளில் ஏற்பட்டுள்ள பெரும் வளர்ச்சி காரணமாக அவைகள் தொடர்பான படிப்புக்களை அதிக அளவில் மாணவர்கள் பயில்கின்றனர். அந்த வரிசையில் இன்ஜினியரிங் துறையின் தத்துவங்களையும் தொழில்நுட்பங்களையும் மருத்துவத் துறைக்கு பயன்படுத்துவதே பயோமெடிக்கல் இன்ஜினியரிங் எனப்படும்.

இதன்மூலம் இருதுறைகளுக்கும் இடையில் இருந்த இடைவெளி முற்றிலும் குறையும் சூழல் ஏற்பட்டுள்ளது. மருத்துவம் மற்றும் உயிரியல் துறையுடன் இன்ஜினியரிங் துறை இணைந்து உருவாக்கப்படும் கருவிகளும் தொழில்நுட்பங்களும் மருத்துவர்கள் நோயை கண்டறிந்து குணமாக்குவதற்கு உதவுகின்றன.

இத்துறையில் ஆராய்ச்சி மேற்கொள்வதும் அதை மேம்படுத்துதலும் முக்கியமாக கருதப்படுகின்றது. அதிநவீன கருவிகளான இ.சி.ஜி., இ.இ.ஜி., இ.எம்.ஜி., இரத்த மூலக்கூறுகளை கண்டறியும் சென்சார்கள், சி.டி.மற்றும் எம்.ஆர். ஸ்கானர்கள், மெக்கானிக்கல் ரெஸ்பிரேட்டர், கார்டியாக் பேஸ்மேக்கர் போன்ற கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.


பயோமெடிக்கல் இன்ஜினியரிங் உதவியோடு லேசர் கருவிகள் மூலம் பெரும்பாலான சத்திரசிகிச்சைகள் மருத்துவமனைகளில் நடக்கின்றன. முன்பு சத்திரசிகிச்சைகள் செய்வதற்கு பல போத்தல்கள் இரத்தம் தேவைப்படும். ஆனால், இப்போது இரத்தம் மட்டுமல்லாமல் கத்தியுமின்றி லேசர் மூலம் சத்திரசிகிச்சை செய்யப்படுகின்றன. மேலும், செயற்கை இருதயம், பேஸ்மேக்கர், செயற்கை வால்வுகள், செயற்கை எலும்புகள், கிரையோசர்ஜரி, அல்ட்ராசோனிக் கருவிகள் போன்றவைகளும் இவற்றில் அடங்கும்.

### கிளைப்பிரிவுகள்

ஏனைய இன்ஜினியரிங் துறைகளை போன்று பயோமெடிக்கல் இன்ஜினியரிங் துறையும் சில கிளைப்பிரிவுகளை உள்ளடக்கியது.

### பயோ இன்ஸ்ட்ருமென்டேஷன்

இத்துறையானது எலக்ட்ரோனிக் உதவியுடன் உரிய அளவுகோலை கொண்டு நோய்களை கண்டறிந்து சிகிச்சை அளிக்க உதவுகின்றது.




### பயோ மெட்டீரியல்ஸ்

மாற்று அறுவை சிகிச்சை செய்வதற்கான செயற்கை உடல் உறுப்புக்களை இத்துறை இன்ஜினியர்கள் உருவாக்குகின்றனர்.

### பயோ மெக்கானிக்ஸ்

உயிரியல் மற்றும் மருத்துவத்துறைக்கு மெக்கானிக்கல் அப்ளிகேஷனை பயன்படுத்துவதாகும். இதன் மூலம் எலும்பு முறிவு, பேஸ்மேக்கர் போன்றவை செய்யப்படுத்தப்படுகின்றன.

### செலுலார் இன்ஜினியரிங்

மனித உடலில் உள்ள உயிரணுக்கள் தொடர்பான அனைத்தும் அறியலாம்.

### டிஸ்யூ இன்ஜினியரிங்

திசுக்கள் வளர்ச்சி, திசுக்களை பேணுதல் போன்றவற்றின் மூலமாக நோய்களை குணமாக்கலாம். பெரும்பாலும் சிறுநீரக குறைபாடு தொடர்பான நோய்கள் இதன் மூலம் சரி செய்யப்படுகின்றன.

### ஜெனிடிக் இன்ஜினியரிங்

மரபுவழிப்பண்பியல் பற்றி அறியலாம்.

### கிளினிக்கல் இன்ஜினியரிங்


மெடிக்கல் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் மற்றும் பிற உபகரணங்கள்பற்றிவிரிவாகஅறியலாம்.

### ஆர்த்தோ பீடிக் பயோ இன்ஜினியரிங்

எலும்பு, நரம்புகள் இணைப்புகள் தசைகள் ஆகியவற்றின் செயற்பாடுகளை கண்டறிந்து அதற்கேற்ப செயற்கையான எலும்புகள் இணைப்புகள் தயார் செய்தலை பற்றி விளக்கும் பிரிவாகும்.

### நேவிகேஷன் சிஸ்டம்ஸ்

இத்துறை பயோ இன்ஜினியர்கள், கணனி மென் பொருள் உதவியுடன் மனித உடலின் உறுப்புக்களின் டிஜிட்டல் படங்களை உருவாக்குகின்றனர். இம்முறை நவீன லேசர் தொழில்நுட்பங்களில் உதவுகிறது.



# அறிவுக் கலசம்

ஆர்.யூ.பாலமுருகன்

## இந்தியாவில் அறிவியல் துறையில் அதிநுட்ப முதுநிலை படிப்புக்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

### எம்.எஸ்சி பொதுச்சுகாதாரம் மற்றும் பூச்சியியல் (M.sc.Public Health Entomology)

வெப்பமண்டல நாடுகளில் எளிதில் பரவக் கூடிய நோய்களான பிளேக், கொள்ளை நோய், டெங்கு, மலேரியா உள்ளிட்ட நோய்களைத் தடுப்பது குறித்த ஆய்வில் புதுவை வெக்டார் கன்ட்ரோல் ஆய்வு மையம் (VCRC) முக்கியபங்கு வகிக்கின்றது.

உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து இத்துறை சார்ந்த படிப்பை (M.sc. Public Health Entomology) என்ற பெயரில் வழங்குகின்றது. இரண்டாண்டு படிப்பான இதற்கு பி.எஸ்சி விலங்கியல், தாவரவியல், வாழ்க்கை அறிவியல், மருத்துவ ஆய்வக தொழில்நுட்பம், நுண்ணுயிரியல், உண வேதியியல், கால்நடை மருத்துவம், எம்.பி.பி.எஸ். உயிர் தொழில் நுட்பவியலுடன் (பயோ டெக்னோலஜி) கூடிய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பட்டங்கள் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

கல்விக்கட்டணமாக 55 ஆயிரத்து 948 ரூபாய் (இலங்கை மதிப்பில் சுமார் 12 ஆயிரம் ரூபாய்) செலுத்த வேண்டும். மிகச்சிறந்த மாணவர்கள் அதே நிறுவனத்தில் பணிப் பயிற்சியை ஊக்கத்தொகையுடன் பெறலாம். உலக சுகாதார நிறுவனம் சார்ந்த அமைப்புக்கள் பொதுசுகாதாரத்துறை என். ஜி.ஓக்களில் எளிதில் வேலைவாய்ப்பு பெறலாம்.

படிப்பு குறித்த மேலும் விபரங்களை http://vcrc.res.in என்ற முகவரியில் காணலாம். குருகோவிந்தசிங் இந்திரபிரஸ்தா பல்கலைக்கழகத்திலும் இப்படிப்பு வழங்கப்படுகின்றது.

### எம்.எஸ்சி உணவுத் தொழில்நுட்பம் (Food Technology)

உலகமயமாக்கல் உணவுத் தயாரிப்பு நிறுவனங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. உணவு சார்ந்த மக்களின் தேவைகள் ஒருபோதும் குறைவதாயில்லை, வெவ்வேறு வகைகளாக விரிவடையே செய்கின்றது. உணவுசார் துறையில் அலகாபாத் பல்கலைக்கழகத்தின் உணவுத் தொழில் நுட்ப நிலை இரண்டாண்டு முதுகலைப் படிப்பை வழங்குகிறது.

# உங்களது செயற்பாட்டில் வெற்றியடைய...

நமது தோல்விகளை நினைத்து நொந்து கொள்ளும் அதேநேரத்தில் அதற்கான காரணம் குறித்து எத்தனை பேர் முறையாக ஆய்வு செய்கின்றோம்? பலவிதமான திறமைகளையும் ஆற்றல்களையும் கொண்டிருக்கும் நாம் அவைகளை முறையாக பயன்படுத்தவிடாமல் தடுக்கும் பலவீனங்களை அடையாளம் கண்டு களையாமல் இருப்பதால்தான் நம்மால் எதையும் சாதிக்க முடிவதில்லை.

உதாரணமாக ஒருவர் வரலாற்றுப் பாடத்தில் சிறந்த பகுப்பாய்வு திறனும் நல்ல விடய ஞானமும் கொண்டிருப்பார். ஆனால் வரலாறு தொடர்பான போட்டித் தேர்வில் அவரால் தேர்ச்சி பெற முடியாது. ஒருவர் நடைமுறை ரீதியாக கணிதத்தில் சிறந்த வல்லுநராகவும் சுயமாக தேற்றங்களை உருவாக்குபவராகவும் இருப்பார். ஆனால், அது தொடர்பான போட்டித் தேர்வுகளைக் கண்டால் பயம். இன்னொருவர் நிறைய பொது விடயங்களை ஆழமாக ஆராய்ந்து விரிவாக பேசக்கூடியவராக இருப்பார். ஆனால், பொது அறிவு வினாப் போட்டிகளில் வெற்றிபெற முடியாது. ஒருவர் நடைமுறையில் சிறந்த இலக்கியவாதியாக இருப்பார். ஆனால், இலக்கியப் பாடங்களில் அதிக புள்ளிகள் பெற முடியாதவராக இருப்பார். ஒருவர் வாய்வழி கதை சொல்வதிலும் சம்பவங்களை விபரிப்பதிலும் சிறந்தவராக இருப்பார். ஆனால், அதையே எழுதச் சொன்னால் அவரால் முடியாது.

இதுபோன்ற நபர்கள் எதனால் தாங்கள் இந்த வகை திறமைகளில் பின்தங்கியிருக்கின்றோம் என்பதைப் பற்றி சுயபரிசோதனை செய்ய வேண்டும். ஏனெனில் போட்டிப் பரீட்சைகள் உள்ளிட்ட பல அம்சங்கள், இன்றைய வாழ்வின் அத்தியாவசியமான அம்சங்களாக மாறியுள்ளன. எனவே, அவற்றில் தேர்ச்சியடைவது மிகவும் முக்கியம்.

### பலவீனங்களை அடையாளம் காணல்

நீங்கள் ஒரு வரலாற்று நாயகரைப் பற்றி ஓரிடத்தில் உரையாற்ற செல்கின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம். உரை முடிந்த பின்னால் உங்களது செயற்பாட்டின் மீது உங்களுக்கே திருப்தி ஏற்படவில்லையெனில் பின்வரும் சிலவிதமான கேள்விகளை உங்களுக்குள்ளேயே கேட்டுக்கொண்டு அதை சரிசெய்ய வேண்டும்.

✶ அந்த வரலாற்று நாயகரின் வாழ்க்கை யை முதலில் நான் முறையாக புரிந்து கொண் டேனா?

✶ சரியான முறையில் அவரது வாழ்க்கை சம்பவங்களை ஒப்பிட்டு பேசினேனா?

✶ முக்கியமான ஆண்டுகள், பெயர்கள் ஆகியவற்றை சரியாக குறிப்பிட்டேனா?

✶ அழுத்தம் கொடுக்க வேண்டிய இடத்தில் அழுத்தம் கொடுத்தேனோ?

✶ போதுமான அளவில் உணர்ச்சிகள் வெளிப்படுத்தினேனோ?

✶ கோர்வை சரியாக இருந்ததா?

✶ எனது உடலசைவுகள் மற்றும் நான் நின்ற விதம் சரியானதா?

✶ எனது குரல், சத்தம் சரியாக இருந்ததா மற்றும் நிதானமாக பேசினேனா?

✶ கொடுக்கப்பட்ட நேரத்திற்கு ஏற்ப பேசி முடித்தேனா? உட்பட ஏராளமான அம்சங்கள் சுயபரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவை.அதற்காக வழக்கமான பலரும் பின்பற்றும் விடயங்களையே செய்ய வேண்டும் என்பதில்லை. மனித வாழ்க்கையின் மகத்துவமே பழைய சம்பிரதாயங்களை உடைப்பதும் புதுமையைப் புகுத்துவதும்தான்.எனவே பலரும் வரவேற்கும், பலரும் விரும்பும் அம்சத்தை நீங்கள் கண்டறிந்தால் அதை தயங்காது பயன்படுத்துங்கள்.

### உதவியை நாடுதல்

உங்களது பலவீனத்தை அடையாளம் காண்பதற்கு நம்பகமானவர்களிடம் உதவியைக் கோரும் அதேநேரத்தில் அந்த பலவீனத்தை களையவும் சரியானநபர்களின் உதவியை நாடலாம்.உங்களுக்கு தெரிந்தவர்களுக்கு அதேபோன்ற பலவீனம் இருந்து அதை களைவதற்கு அவர்கள் என்ன முயற்சி எடுத்து வெற்றி கண்டார்கள் என்பதனை அறிந்து நீங்களும் முயற்சிக்கலாம்.

நீங்கள் மிக சாதாரணமாக நினைக்கும் ஒரு நபர் கூட உங்களுக்கு மிகவும் மதிப்பு வாய்ந்த ஆலோசனையை கொடுக்கலாம்.எனவே யாரையும் எளிதில் அலட்சியம் செய்துவிட வேண்டாம்.மேலும் இது தொடர்பாக நிபுணர்கள் எழுதிய புத்தகங்கள் மற்றும் தொலைக்காட்சி மற்றும் வானொலிகளில் வரும் அவர்களின் ஆலோசனையையும் கேட்டுப் பயன்பெறலாம்.

நீங்கள் சாதனை செய்ய விரும்பும் துறையில் உங்களுக்கு முன்பே ஒரு சாதனையை செய்து முடித்தவரின் செயற்பாட்டையும் அனுபவத்தையும் கவனித்து அதில் உங்களுக்கு பொருத்தமானதை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். வாழ்வில் வெற்றிபெறுவதற்கு நேர்மறை எண்ணமும் தன்னம்பிக்கையும் மிகவும் முக்கியம். ஒரு போட்டித் தேர்வை எழுதுவதற்கோ ஒரு உரையை சிறப்பாக நிகழ்த்துவதற்கோ ஒரு சவாலான செயலை செய்து முடிப்பதற்கோ தன்னம்பிக்கையும் மனோதைரியமும் நேர்மறை எண்ணமும் வேண்டும். இவைகளே வெற்றிக்கான அடி நாதங்கள்.

# சங்கா சதம்; இலங்கை ஆறுதல்

# தொடரை வென்றது தென்னாபிரிக்கா



(ஜோகனஸ்பேர்க்)

குமார் சங்கக்காரவின் அதிரடிச்சதத்தின் மூலம் இலங்கை அணி 2 விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்க அணியை வீழ்த்தியது.

இதன் மூலம் இலங்கை அணி தொடரில் 2 ஆவது ஆறுதல் வெற்றியைப் பெற்றது. தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வந்தது.

இதில் முதல் மூன்று ஒரு நாள் போட்டிகளில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி தொடரை 3:0 என்ற கணக்கில் தனதாக்கிய நிலையில் நான்காவது போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்றது.

இத் தொடரின் 5ஆவதும் இறுதியுமான போட்டி நேற்று ஜோகனஸ் பேர்க்கில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் திலகரட்ண டில்சான் முதலில் களத்தடுப்பை தேர்வுசெய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி சிமித், டி வில்லியர்ஸின் அபார சதத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களையிழந்து 312 ஓட்டங்களைக் குவித்தது.

ஏ பி டி வில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 98 பந்துகளில் (10 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் உட்பட) 125 ஓட்டங்களையும் கிரேம் சிமித் 125 ஓட்டங்களையும் (2009 ஆண்டுக்குப் பின் முதலாவது சதம்) எடுத்தார்.

பந்து வீச்சில் மலிங்க 2 விக்கெட்டுக்களையும் சேனநாயக்க ஒருவிக்கெட்டையும் சாய்த்னர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 313 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு தரங்க-டில்சான் ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 72 ஓட்டங்களை எடுத்தபோது உபுல் தரங்க 39 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து சங்கக்கார களமிறங்க மறுமுனையில் அணித் தலைவர் திலகரட்ன டில்சான் 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த தினேஸ் சாண்டிமல் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 29.5 ஓவர்களில் 175 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் 4 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த சங்கக்கார-திரிமென்னே ஜோடி அபார ஆட்டத்தை வழங்கினர்.

இதில் குமார் சங்கக்கார 96 பந்துகளில் தொடரில் தனது முதலாவது சதத்தை பூர்த்தி செய்தார்.

எனினும் குமார் சங்கக்கார 97 பந்துகளில் (10 பவுண்டரிகள் உட்பட 102 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த மத்தியூஸ் 06, பெரேரா 02, குலசேகர பூச்சியத்துடனும் வெளியேறினர். மறுமுனையில் அரைச்சதம் கடந்து அசத்திய திரிமென்னே 69 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 49.3 ஓவர்களில் 308 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டக்களை இழந்தது.

இந் நிலையில் களமிறங்கிய சேனநாயக்க சிக்ஸர் விளாச இலங்கை அணி 49.5 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 314 ஓட்டங்களை குவித்தது.

இதன் மூலம் இலங்கை அணி 2 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் ரிசொற்சோபே, டுமினி, பார்னல், பீற்றர்சன் தலா 2 விக்கெட்டுக்களை சாய்த்தனர்.

இப்போட்டியில் இலங்கை அணியின் வெற்றி நாயகன் குமார் சங்கக்கார ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.



இத் தொடரை தென்னாபிரிக்க அணி 3:2 என்ற கணக்கில் கைப்பற்றியது.

## ஒபாமாவின்...

முக்கிய அரசாங்கத் தலைவர்களையும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் குடியியல் சமூகத்தைச் சேர்ந்தவர்களையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ள ஸ்ரீபன் ரப் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக முக்கிய கவனத்தைச் செலுத்துவார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க ஜனாதிபதியின் போர்க்குற்ற விவகாரங்களுக்கான தூதுவராகப் பணியாற்றும் இவர், 2007 ஆம் ஆண்டு ஜனவரியில் சியராலியோனுக்கான விஷேட நீதிமன்றத்தில் வழக்குத்தொடுநராகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சியராலியோனில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் பெருமளவு கொடூரங்களுக்குப் பொறுப்பானவர் என லைபீரியாவின் முன்னாள் ஜனாதிபதி சார்ள்ஸ் ரெயிலர் மற்றும் ஏனையவர்கள் மீது வழக்குத்தாக்கல் செய்யப்படுவதற்கு இவரே பொறுப்பாக இருந்தார்.

ஜெனிவாவில் மார்ச் மாதத்தில் நடைபெற இருக்கும் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடருக்கு முன்னோடியாகவே இவரது விஜயம் இடம்பெறவிருக்கின்றது.

இந்தக் கூட்டத்தொடரில் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு மறுத்திருக்கும் அரசாங்கம், அதற்கு எதிராகக் கொண்டுவரக்கூடிய தீர்மானங்களை முறியடிப்பதற்கு ஏனைய நாடுகளின் ஆதரவையும் கோரிவருகின்றது.

இந்நிலையில், இந்த விஜயத்தின் போது உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை இவர் விமர்சனத்திற்கு உள்ளாக்குவதுடன், இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவர்களுடனும் அது தொடர்பாக பேச்சுக்களை முன்னெடுப்பார் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான போரின் இறுதிப்பகுதியில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என அரசாங்கத்தை அமெரிக்கா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், சட்டவிரோதமான கொலைகளில் அரசாங்கம் சம்பந்தப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்ட தமிழர்களை அரசாங்கத்தின் படைகள் படுகொலை செய்வதை உறுதிப்படுத்தும் வீடியோ நாடாக்களும் கிடைத் திருப்பதாகவும் இவ்வறிக் கையில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (எ-5)

## பழிவாங்க...

அப்போது அவர் மேலும் பேசுகையில், உள்ளங்களில் நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்வதன் மூலம் சிறந்த ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று குழந்தைகளின் உள்ளங்களில் நல்ல கருத்துக்கள் விதைக்கப்படவேண்டும்.

மனங்களில் அமைதி நிலவினால் வீட்டில் சந்தோசம் வரும். அது நாட்டுக்கு சந்தோசத்தை தரும். அதன் மூலம் உலகத்தில் மகிழ்ச்சி தோன்றும். நாம் யாரையும் பழிவாங்க நினைக்கக் கூடாது. தீமைகள் செய்தவரையும் மன்னிக்கும் மனப் பாங்கு நமக்கு வர வேண்டும்.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல் என்ற திருக்குறளை பின்பற்ற வேண்டும். இலங்கையின் கிராமப்புற மக்கள் பயன்பெறும் இத்திட்டங்களை செயல்படுத்த உதவி செய்யத்தயாராக இருக்கின்றேன். பல்வேறு இனமக்கள் வசிக்கும் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் வேற்றுமைக்கு இடம் கொடுத்துவிடக் கூடாது என்றார்.

அமைதியான, சுபீட்சமான அபிவிருத்தி அடைந்துவரும் நாட்டில் இளைஞர் சக்தி முக்கியமானது. நான் கலந்து கொண்ட பல்வேறு வைபவங்களைவிட இங்கு அதிக இளையோர் கலந்து கொண்டிருப்பதைப்பார்த்து மிகவும் சந்தோசம் அடைகின்றேன்.

இளைஞர் சக்தியை உரிய முறையில் கட்டியெழுப்புவதன் மூலம் இன்னும், 20 வருடங்களில் இலங்கையை ஒரு சிறந்த பொருளாதார வளமிக்க நாடாக்க முடியும்.

உலகம் விஞ்ஞான ரீதியில் முன்னேற்றம் கண்டுள்ள இக்கால கட்டத்தில் மாணவர்கள் கல்வியில் எதையும் சாதிக்க முடியும். இன்று மாணவ சமூகம், டாக்டர்கள், பொறியியலாளர்கள் ஆவதை விட அரசியல் தலைவர்களாக வருவதிலேயே நாட்டம் காட்டுகின்றனர்.

இதுவும் ஆரோக்கியமான ஒன்று. எனினும் மாணவ சமூகம் சூழலை பாதுகாப்பதிலும் ஆர்வம் காட்ட வேண்டும். ஒவ்வொரு மாணவனும் குறைந்தது ஐந்து மரங்களையாவது நாட்ட வேண்டும் என்றார். (எ-5)

## அப்துல்...

சந்திப்பையும் நடத்தவுள்ளார். அத்துடன் அறிவியல் சமூகத்தின் தோற்றம் என்னும் தலைப்பில் பிற்பகல் 3.00 மணி முதல் 4.00வரை கருத்துரையினையும் வழங்குவார். (ச-11)

## கச்சதீவில்...

வந்திருந்த பிரசார யாத்திரை குறித்து கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் செய்தியாளர்களிடம் 108 நாட்கள் நடைபெறும் இந்த யாத்திரை ஏப்ரல் 14ஆம் திகதி அம்பேத்கர் பிறந்த நாளில் நிறைவடைகிறது.

யாத்திரையில் மதுவிலக்கு, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, ஊழல் எதிர்ப்பு இயக்க ஆதரவு, சுதேசி கொள்கை ஆகியவற்றை வலியுறுத்தி பிரசுரங்களை வழங்கி வருகிறோம். தமிழகத்தில் மும்மொழிக் கொள்கையை அமுல்படுத்தக் கோரி அனைத்து மாவட்டத் தலை நகரங்களிலும் ஜனவரி 25 ஆம் திகதி கோரிக்கை மனு அனுப்பும் போராட்டம் நடத்தப்படும்.

இந்தியாவின் ஒரு பகுதியான கச்சதீவில் ஜனவரி 26 குடியரசு தினத்தன்று மத்திய அரசு சார்பில் தேசியக் கொடியை ஏற்ற வேண்டும். கச்சத்தீவை மீட்டெடுக்க முதல்வர் அறிவித்துள்ள அறிவிப்பின் ஒரு பகுதியாக அந்தத் தீவில் தேசியக் கொடியை ஏற்ற நாங்கள் தொடர்ந்து முயற்சித்து வருகின்றோம். அதன்படி ஜனவரி 26 ஆம் திகதி கட்சியின் மாநிலச் செயலர் பவர் நாகேந்திரன் தலைமையில் தேசியக் கொடி ஏற்றப்படும் என்றார் அவர். (எ-5)

## உறுப்பு நாடு...

சர்வதேச சட்டங்கள் ஒரு தலைப்பட்சமாகவும், தெரிவு செய்யப்பட்ட அடிப்படையிலும் நாடுகளின் மீது பிரயோகிக்கப்படக் கூடாது. சர்வதேச சமாதானத்தை வலுப்படுத்த வேண்டிய தார்மீக பொறுப்பு ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு காணப்படுகின்றது. உள்நாட்டு மற்றும் சர்வதேச பிரச்சினைகளுக்கு அமைதியான வழி முறையில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இலங்கையின் நிலைப்பாடாக அமைந்துள்ளது என பாலித ஹோகன தெரிவித்துள்ளார். (எ-5)

## தமிழரின்...

அமுல்படுத்தப்படுவதனை எமது கட்சி ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது.

தமிழ் மக்களின் யதார்த்தமான பிரச்சினை களுக்கு தீர்வு வழங்காது இந்தியாவின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல் படுத்துவது நியாயமற்றது. அரசாங்கம் முதலில் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டும்.

இந்த தீர்வுத்திட்ட யோசனைகளை ஏனைய கட்சிகள் ஆய்வு செய்து அதற்கான பதிலை வழங்க வாய்ப்பு ஏற்படும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவது குறித்து ஆளும் கட்சியினருக்கு இடையில் கருத்து முரண்பாடு நிலவி வருகிறது.

ஆளும் கட்சியைச் சேர்ந்த சில அமைச்சர்கள் செனட் சபை குறித்து கருத்து வெளியிடும் அதேவேளை, 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு சில அமைச்சர்கள்எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர் என அவர் மேலும் கூறினார். (எ-5)

## மு.காவுடன்...

வேண்டும் என கலாநிதி அப்துல் கலாம், கிராமிய பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கான சில தகவல்களையும் வழங்கினார்.

அபிவிருத்தி செயற்பாடுகளில் கிராம மட்ட பங்களிப்பு மிக அவசியம் எனவும் குறிப்பிட்டார். சாதாரண அரசியலின் ஊடாக எதனையும் சாதிக்க முடியாது எனவும் அப்துல் கலாம் தெரிவித்தார் என அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களை அப்துல் கலாம் சந்தித்து பேசவுள்ளார் என தெரிவிக்கப்பட்டது. (எ-5)

## முன்னாள் போராளிகள் 74 பேர் பெற்றோரிடம் ஒப்படைப்பு



புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 74 பேர் நேற்றுக் காலை மட்டக்களப்பில் விடுதலை செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு மாநகரசபை மாநாட்டு மண்டபத்தில் சிறைச்சாலைகள் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போதே புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## கிருஸ்ணா– கூட்டமைப்பு...

வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா 16ஆம் திகதி மாட்டுப் பொங்கல் நாளன்று பிற்பகலில் கொழும்பு வருவதாலேயே அன்று அலரி மாளிகையில் பொங்கல் விழாவைக் கொண்டாட முடிவு செய்திருந்தார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

ஆனால் அதுபற்றி எஸ்.எம். கிருஸ்ணா அறிந்திருக்கவில்லை. அவர் முதலாவது சந்திப்பை தாஜ் சமுத்ரா விடுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மேற்கொள்ளவே திட்டமிட்டிருந்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கியதும்தான் அலரி மாளிகைப் பொங்கல் விழா ஏற்பாடு குறித்து கிருஸ்ணாவிடம் தகவல் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், அதில் பங்கேற்க அழைப்பு விடுத்தார்.

இந்திய விமானப்படை ஜெட் விமானத்தில் கட்டுநாயக்கவில் வந்திறங்கிய எஸ்.எம்.கிருஸ்ணா உடனடியாக விமானப் படை உலங்கு வானூர்தியில் தாஜ் சமுத்ரா விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கு சிறிது நேரம் இளைப்பாறிய பின்னர் இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா அவரை அலரி மாளிகைப் பொங்கல் விழாவுக்கு அழைத்துச் சென்றார்.

அங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் எவரையும் காணவில்லை. இந்திய வம்சா வளித் தமிழர்கள்தான் அதிகம் இருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஜனாதிபதியின் பொங்கல் விழா அழைப்புக்கூட அனுப்பப்படவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஸ்ணாவின் கண்களில் முதலில் பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே, ஜனாதிபதி அலரி மாளிகையில் மாட்டுப் பொங்கல் நடத்தியதாக கொழும்பு ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (எ-5)

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
A/L 2014 வணிகக் கல்வி
B.S. பசில்
ஆரம்பம் : 24.01.2012
மு.ப. 8.00
A/L DAY CLASS
நடைபெறுகிறது
(C-5644)

# திறமையுள்ள சிறைக் கைதிகள் தண்டனைக் காலத்திற்கு முன் விடுதலை

## அமைச்சர் கஜதீர தெரிவிப்பு

சிறைக் கைதிகளில் நன்நடத்தையும் திறமையும் உள்ள பலர் தமக்கு வழங்கப்பட்ட தண்டனைக் காலத்துக்கு முன்னரே விடுதலை செய்யப்படுவர்.

அதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக சிறைச்சாலைகள் புனருத்தாரன மற்றும் மறு சீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் புனருத்தாரன மற்றும் மறுசீரமைப்பு அமைச்சும் மட்டக்களப்பு சிறைச் சாலையும் இணைந்து நடத்திய பெங்கல் விழா நேற்று மட்டக்களப்புச் சிறைச்சாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் கூறியதாவது,

சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகளில் அனைத்துத்துறைகளையும் சார்ந்த திறமையாளர்கள் உள்ளனர்.

சிறைச்சாலை ஒன்றில் மூன்று மீற்றர் நீளத்தில் வரையப்பட்ட சித்திரமானது மிக்க கருத்தாளமுள்ளதாகவும் சௌந்தரியமிக்கதாகவும் உள்ளது.

கைதிகளில் நன்நடத்தையும் திறமையும் உள்ள பலர் தமக்கு வழங்கப்பட்ட தண்டனைக் காலத்துக்கு முன்னரே விடுதலை செய்யப்படுவர்.

அதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் வண்ணம் இம்முறை மட்டக்களப்பில் எமது பொங்கல் விழாவை நடத்தியதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இதேபோல் இனிவரும் காலங்களில் சகல இனங்களும் இணைந்து செயற்படும் வண்ணம் முஸ்லிம்களின் ரம்ஸான், கிறிஸ்தவர்களின் கிறிஸ்மஸ், சிங்களவரின் வெசாக் முதலிய பண்டிகை விழாக்களை நடத்த தீர்மானித்துள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பீ.டபிள்யூ. கொடிசிறி, பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் கித்சிறி பண்டார மட்டு. மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டனர். (எ-5)

## தீவகத்தில் நண்டு வளர்க்கும் முன்னாள் போராளிகள்

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதியில்,புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளும் இராணுவத்தினரும் இணைந்து நண்டு வளர்ப்புத் திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். யாழ். இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவின் முன்மொழிவின்படி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் இராணுவத் தளபதியின் உத்தரவின்படி இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறையில் 3 மாதங்களுக்குமுன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்திக்கீழ் நன்னீர் நண்டு வளர்ப்புக்கான சிறிய குளங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில்1.6 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டின் கீழ் ஒவ்வொன்றும் தலா 50, 40 அடி அளவுள்ள 16 நண்டு வளர்ப்புத் தடாகங்கள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் இதனோடு தொடர்புடைய நண்டு பதனிடல், சந்தைப்படுத்தல் தொழில்வாய்ப்புகளும் கிடைக்கும் என்று இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

க.பொ.த உயர்தர பெறுபேற்றுக்கமைய 100% வரை Scholorship
After A/L O/L
Engineering-USA
ICTA Scholorship
BIT University of Colombo
CIMA-UK
Only Rs 14,400 Per Level
University A/L Students } 50% Off
மாணவர்கள் BCS - UK , IELTS, TOEFL, CCNA, Java, ICDL, கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.
UK, USA பல்கலைக்கழகங்களில் Master Degree
Qualified Lectures Panel, Passing Guarantee,12 Years Experience
Listed college-CIMA UK, Silver Award-Microsoft-USA, Best performance Award-University of colombo

MCS
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Parameswara Junction
தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
Free5 Course fee*
Diploma Courses..
*MsOffice, AutoCAD, *Web Designing
*Hardware *Accounting *DTP *English
SMS Your name & Course to 772395895 & Get Scholorship

## மரண அறிவித்தல்

# இராமநாதன் கனகநாதன்



மண்டைதீவு 1-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கொக்குவில் பொற்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் கனகநாதன் கடந்த வெள்ளிக்கிழமை 20.01.2012 இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராமநாதன் விசாலாட்சி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சபாவதிப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், இராஜேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகசப்பாவதி இரத்தினகுமாரன் (கனடா) (கிராமசேவகர்) விஜயகுமாரன், ஜெயகுமார், உதயகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் தேவிகா(கனடா), கார்த்திகா, காஞ்சனா, கல்பனா காலஞ்சென்ற ஜனகன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சிறிதரன் (கனடா) வேல்மைந்தன், சுதன் ஆகியோரின் அன்பு மாமனும் சிந்துஜா (கனடா) சாதுஜன் (கனடா) விதுசன் (கனடா) சுடரினி, கேதாரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23.01.2012) திங்கட்கிழமை காலை 10.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில், இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இல. 106, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்

(C-5646)

## மரண அறிவித்தல்

# செல்லத்துரை இராசரத்தினம்

(சுழிபுரம்) டென்மார்க்

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசரத்தினம் 22.01.2012 அன்று இயற்கை எய்தினார்.

இவர் காலஞ்சென்றவர்களான Dr.செல்லத்துரை- பொன்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், சிறுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னப்பா மற்றும் தங்கம்மா தம்பதிகளின் மருமகனும், பிறேமாவின் அன்புக்கணவரும் சற்குணாம்பிகை பொன்குணரத்தினம், வரதரத்தினம் (கொழும்பு), கிமாலயரத்தினம் (கனடா), Dr.கிருபாரத்தினம், பத்மாம்பிகை (ஆசிரியர் யா/ சில்லாலை றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மூர்த்திரத்தினம் (பொறியியலாளர் - டென்மார்க்), குணரத்தினம், கஜரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இராசகுலேந்திரன் (மருந்தாளர், இளவரசன் மருந்தகம்) திலகவதியார் (உதவிக் கல்விப்பணிப்பாளர், கிளிநொச்சி), சாந்தினி (ஆசிரியர் -கொழும்பு ஹம்சா முஸ்லிம் ம.வி), சிவலக்குமி (கனடா), அகிலவல்லி(ஆசிரியர்- யா/ மகாஜனாக் கல்லூரி), சிற்சபேசன் (ஆசிரியர்- கிளி/ பரந்தன் இந்து.ம.வி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் டென்மார்க்கில் நடைபெறும். சுழிபுரத்தில் உள்ள அன்னாரது இல்லத்திலும் துயர்பகிர்வு இடம்பெறும்.

சுழிபுரம் மேற்கு (7350) தகவல்: சகோதரர்கள்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.